GOKULAM
ஏப்ரல் 2007 • 80 பக்கங்கள் • விலை ரூ.8/-

கோகுலம்




'க்ளிக்' கேலரி
கோடை வந்திடுச்சு,
தண்ணீரைச் சிக்கனமா
'யூஸ்' பண்ணணும்!
சிறுமி: ஜி. சுரேகா
பெங்களூரு.


கல்கி
தரம் நிரந்தரம்

கோகுலம்

ஏப்ரல் 2007 ■ மலர்:25 ■ இதழ்: 3

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் – பாரதியார்

விடுமுறைச் சிறப்பிதழ்-1



கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட்லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர்:
சீதா ரவி
உதவி ஆசிரியர்:
ஆரணி யுவராஜ்
வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன், பி.ஆர். ராஜன்
எம். மோகன், ச. கார்த்திகேயன்
தொலைபேசி :
2225 1522 / 2225 0623
2225 1324
தொலைநகல் :
044 - 22251021
மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.96/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : **25 யுஎஸ். டாலர்**

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!


அன்புள்ள உங்களுக்கு...



கோடை ஆரம்பமாகிவிட்டது. சூரியன் உக்கிரமாகச் சுட்டெரிக்கத் தொடங்கிவிட்டான். ஆண்டுக்கு ஆண்டு கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அதனால் ஏற்படும் விளைவுகளுள் முக்கியமானது தண்ணீர்ப் பிரச்னை.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தண்ணீருக்காக எப்படியெல்லாம் அவதிப்பட்டோம் என்பதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். இப்போது அந்த நிலை சற்றே

பொன்னான நேரம்!





மாறியுள்ளது. ஆயினும், சில இடங்களில், குறிப்பாக கிராமங்களில் தண்ணீருக்காக பல மைல்கள்



சென்று, காத்திருந்து பிடித்து வருகிற நிலை தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது. ஆகவே நாம் தண்ணீரை வீணாக்காமல் முறையாகப் பயன்படுத்த வேண்டும். முடிந்தால், உங்களிடமுள்ள அதிகப்படியான நீரை அடுத்தவர் பயன்படுத்த வழி வகை செய்யலாம். நாம் சேமிக்கும் ஒவ்வொரு துளி நீருமே அடுத்தவர்களுக்கு மறைமுகமாகப் பயன்படுகிறது என்பதை மறக்காதீர்கள்.

உங்களுக்கு விடுமுறை தொடங்கியிருக்கும். தண்ணீரைப் போலவே நேரமும் பொன் போன்றது. ஆகவே, விடுமுறை நேரத்தை மகிழ்ச்சியுடன் செலவழிப்பதுடன் பயன்தரும் வகையிலும் செலவழியுங்கள்.

அனைவருக்கும்
இனிய தமிழ்ப் புத்தாண்டு
வாழ்த்துகள்!

அன்புடன்
கோகு

அசத்த வருது

ஒவ்வொரு கோடை விடுமுறையின் போதும் உங்களைக் குஷிப்படுத்த ஹாலிவுட்டிலிருந்து திரைப் படங்கள் வருவது உங்களுக்கு நன்கு தெரிந்திருக்கும். அந்த வகையில் ஹாலிவுட்டை தற்போது கலக்கிக் கொண்டிருக்கும் சூப்பர் ஹிட் படங்கள் விரைவில் நம் ஊர் தியேட்டர்களைக் கலக்கப் போகின்றன.

அவற்றைப் பற்றிய சுருக்கமான ப்ரிவ்யூ.

* குறும்புக்கார வில்பர்



Charlotte's Web

ஹாலிவுட்டில் பெரும்பாலும் நாவல்களைத்தான் படமாக எடுக்கிறார்கள். இந்தப் படமும் அப்படித்தான். ஐந்து முதல் ஏழு வயது உள்ள குழந்தைகளுக்கான படம் இது. ஏழு வயதுக்கு மேல் உள்ளவர்கள் பார்த்தால், அவர்களும் ஒரு குழந்தையாக மாறிவிட வேண்டியதுதான்!

கதை ரொம்ப ரொம்ப சிம்பிள். ஒரு வெண் பன்றி. பெயர் வில்பர். குறும்புக்காரக் குட்டிப் பெண் இன்னொரு கதாபாத்திரம். வில்பர் நல்ல துறுதுறு. தனது குட்டி வாலைச் சுழற்றி சுழற்றி விளையாடும், குதிக்கும், கிண்டலடிக்கும். எதிர்பாராத விதமாக வில்பருக்கு ஓர் ஆபத்து! 'கொழுகொழு'வென்று இருக்கும் இந்தப் பன்றியைப் பிடித்துப் போய்ச் சாப்பிட வேண்டும் என்று ஒருவருக்குக் கொள்ளை ஆசை. வில்பரை எப்படியோ வளைத்துப் பிடித்து விடுகிறார் அவர்.

பாவம்! நேற்று வரை விளையாடிக் கொண்டிருந்த வில்பர் இப்போது சிறையில். யோசனையுடன் வானத்தை நோக்கிப் பார்க்கிறது வில்பர். 'என்ன செய்வது? எப்படித் தப்பிப்பது? யார் நம்மைக் காப்பாற்றுவார்கள்?'

"கவலைப்படாதே! நான் உன்னைக் காப்பாற்றுகிறேன்" என்கிறது ஒரு சிலந்தி. இந்தச் சிலந்திக்கு வில்பர் என்றால் உயிர். வில்பர் செய்யும்

மருதன்





■ ரோடியும், ரீட்டாவும்

சேஷ்டைகளைத் தொலைவிலிருந்து ரசித்துக்கொண்டிருக்கும். தன் சிநேகிதருக்குப் பிரச்னை என்றதும் களத்தில் குதித்துவிடுகிறது. பிறகென்ன? ஒரே அட்டகாசம்தான்; அமர்க்களம்தான்!

■ புதிய உலகில் ரோடி

ஹாலிவுட்!



பன்றியாக இருந்தாலும் சரி, சிலந்தி, குதிரையாக இருந்தாலும் சரி, அத்தனை தத்ரூபமாகப் பேச வைத்திருக்கிறார்கள்.

■ அசர வைக்கும் வில்லன்



வாயசைப்புகள் கனகச்சிதம். 'ஜுலியா ராபர்ட்ஸ்' போன்ற பிரபல நடிகைகள் பின்னணி குரல் கொடுத்திருக்கிறார்கள்.

அதே சமயம் இப் படத்தைப் பற்றி ரசிகர்களிடமுள்ள சிறுகுறை, நாவலைப் போல் படம் விறுவிறுப்பாக இல்லை என்பது.

Flushed Away

ரோடி என்று ஓர் எலிக்குட்டி லண்டனில் உள்ள ஒரு மிகப் பெரிய பணக்காரக் குடும்பத்தின் செல்லப் பிராணி. நாளொரு மேனி பொழுதொரு வண்ணம் என்று போஷாக்காக வளர்கிறது. ஒரு நாள், தப்பித் தவறி, வீட்டிலிருக்கும் ட்யூப் வழியாக சாக்கடையில் விழுந்துவிடுகிறது.

புதிய உலகம்! எங்கு திரும்பினாலும் இருட்டு. அசுத்தமான நீர். திருதிருவென்று விழித்துக் கொண்டு நிற்கிறது ரோடி. நல்ல வேளையாக ரீட்டா என்னும் பெண் சுண்டெலியின் நட்பு கிடைக்கிறது. (ரீட்டாவுக்குக் குரல் கொடுத்திருப்பவர் டைடானிக் புகழ் கேட் வின்ஸ்லெட்).



* 'Charlotte's Web' படத்தில்...

இருவரும் சேர்ந்து கைகோத்து சுற்றிக் கொண்டிருக்கும்போது, திடீரென்று ஒரு வில்லன். கோட், சூட் போட்டு டை கட்டிக் கொண்டிருக்கும் தவளை வில்லன் இவர். உலக மகா சதித் திட்டங்களைத் தீட்டி வைத்திருக்கிறார் இவர். நமது ரோடி, ஜேம்ஸ் பாண்டாக மாறி தவளையாரின் சதித் திட்டங்களைச் சுக்கு நூறாகச் சிதறடித்து தேசத்தைக் காப்பாற்றுகிறார்.

சிம்பிள் கதைதான். ஆனால் கிராஃபிக்ஸில் வித்தை காட்டியிருக்கிறார்கள். தவளையாரின் அடியாட்கள் சாக்கடைக்குள் உட்கார்ந்து புத்தகம் படிப்பதும், கலாட்டா செய்வதும், ரொம்ப சீரியஸாக வாழ்க்கையைப் பற்றியெல்லாம் தத்துவம் பேசுவதும் செம தமாஷ்! 'ஷ்ரெக்,' 'மடகாஸ்கர்' படங்களை எடுத்த டீம் அளிக்கும் இன்னொரு ட்ரீட் இது!

Spider Man 3

ஸ்பைடர் மேன் மூன்றாவது பாகம் தயாராகிவிட்டது. மே மாதம்

ஹாலிவுட்டில் ரிலீஸ். ஓரிரண்டு மாதங்களில் நம் ஊரிலும் வந்து விடும்.

ஸ்பைடர்மேன் முதல் இரண்டு படங்களை ஏற்கெனவே பார்த்தவர்களுக்கு இந்தப் படம் எப்படியிருக்கும் என்று நன்றாகவே தெரிந்திருக்கும். கதை என்று பெரிதாக எதுவும் கிடையாது. கட்டடம் விட்டு கட்டடம், மாடி விட்டு மாடி, சும்மா ஜம்மென்று தாவித் தாவிக் குதித்துச் சண்டை போடுகிறார் ஸ்பைடர்மேன்.

வழக்கம் போல் கிராஃபிக்ஸில் கலக்கியிருக்கிறார்கள். ஹாலிவுட்டில் எந்தப் பத்திரிகையைப் புரட்டினாலும் ஸ்பைடர்மேன் புகழ்தான். புதிய வில்லன்கள் பலர் இந்த முறை அறிமுகம் ஆகிறார்கள். அதனால் சண்டைக் காட்சிகள் முந்தைய படங்களைவிட இதில் கூடுதலாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.



* **'Spider Man 3'** படத்தில்...

இன்னொரு செய்தி. **ஸ்பைடர்மேன் - 4** பற்றிப் பேச்சு வார்த்தைகள் இப்போதே தொடங்கிவிட்டன!


இந்த மூன்று படங்களுமே உங்களின் கோடை விடுமுறையைக் குதூகலமாக்கும் என்பதில் சந்தேகமில்லை. என்ஜாய் குட்டீஸ்!

* **'Flushed Away'** படத்தில்...





கபடி.. கபடி... கபடி...



ஹலோ தோழர்களே! பரீட்சையெல்லாம் சூப்பரா முடிச்சாச்சா? மாதா மாதம் இந்தப் பகுதிக்கு நல்ல வரவேற்பு கிடைப்பதை உங்களிடமிருந்து வருகிற பதில்களின் எண்ணிக்கை மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது. மகிழ்ச்சியாக இருக்கிறது; சென்ற மாதம் கேட்கப்பட்ட கேள்விகளும் தேர்ந்தெடுக்கப்பட்ட உங்கள் பதில்களும்:

கோடை விடுமுறையில் நீங்கள் செய்ய நினைத்திருக்கும் பயனுள்ள செயல் என்ன?

எங்கள் பள்ளியில் கற்றுக்கொடுத்த கைவினைப் பொருட்களை; எனது கைத் திறமை மூலம் விதவிதமாகச் செய்யலாமென திட்டமிட்டுள்ளேன். மேலும் புத்தகம் படிப்பது, அம்மாவுக்கு உதவுவது என பல திட்டங்கள் உள்ளன.

- ஜா.ஹேமலதா, ஏழாம் வகுப்பு, சிவகாசி இந்து நாடார் பெண்கள் மே.நி.பள்ளி, சிவகாசி

இந்த விடுமுறையில் இந்தியும் ஆங்கிலமும் கற்றுக்கொள்ளப் போகி

றேன். ஏனெனில், இந்தி தெரிந்தால் இந்தியா முழுவதும், ஆங்கிலம் தெரிந்தால் உலகம் முழுவதும் பிரச்னையின்றிச் செல்லலாம் அல்லவா!

- ஜீ.வி.நிர்மலா தேவி, ஆறாம் வகுப்பு, அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளி, திருவண்ணாமலை





உங்களுக்கு மிகவும் பிடித்த விளையாட்டு எது? ஏன்?

கபடி. ஏனெனில் எங்கள் ஊரில் கபடி விளையாடுவது என்பது ஒவ்வொருவரின் இரத்தத்திலும் ஊறியுள்ள விஷயம். தவிர, இது தமிழரின் பாரம்பரிய விளையாட்டு. எனவே இது எனக்கு மிகவும் பிடிக்கும்.

- இ.இராஜேஷ், உக்கடை அ.அப்பாவுத் தேவர் மே.நி.பள்ளி, அம்மாப்பேட்டை



எனக்கு மிகவும் பிடித்த விளையாட்டு ஹாக்கி. ஏனெனில் இது நம் தேசிய விளையாட்டு. ஆனால் இந்தியாவில் இவ்விளையாட்டு சிறிது சிறிதாக ஒதுக்கப்படுகிறது. ஆகவே ஹாக்கி விளையாட்டை நல்ல நிலைக்குக் கொண்டு வர பாடுபடுவேன்.

- மு.ராம்பிரசாத், எட்டாம் வகுப்பு, ஸ்ரீ வையாபுரி மே.நி.பள்ளி, சங்கரன் கோவில்

ஐந்தே வரிகளில் அழகான

கவிதை எழுதுங்களேன்!

அன்பின் வடிவே புத்தர்பிரான்
அஹிம்சை உருவே காந்திமகான்
இரக்கத்தின் பெயரே இயேசுவாம்
மூவரும் சொன்ன வழிநடந்தே
முன்னேறுவோம் வாழ்வு தனிலே!

- சி.யோகேஸ்வரன், ஐந்தாம் வகுப்பு, ஸ்ரீஜெயேந்திரர் கோல்டன் ஜூபிலி மெட்ரிக் பள்ளி, காஞ்சிபுரம்

கடமையில் கண் வை
கண்களில் கருணை வை
செயலில் வேகம் வை
வேகத்தில் விவேகம் வை
பேச்சினில் அன்பை வை
அன்பினை அனைவரிடமும் வை!

- ஜி.சாய்சுபலட்சுமி, திருநெல்வேலி

சுதந்திரத்துக்குப் பின் தமிழகத்தின் முதல் முதலமைச்சர் யார்?

இக்கேள்வி உங்களைச் சற்றே குழப்பி இருக்கிறது என்பது வந்த பதில்கள் மூலம் தெரிந்தது. ஏனெனில் சுதந்திரம் கிடைத்த சமயத்தில் முதல்வராக இருந்தவர் **ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்** *(1947-49)*. பொதுத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் முதலமைச்சர் **இராஜாஜி** *(1952-54)*. ஆகவே எது சரியான விடை என்பது புரியாமல் பலர் இரண்டையும் எழுதியுள்ளனர். ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் என்பதைக் குறிப்பிட்டவர்களில் இருவர் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்கள் :

அ.மணிலட்சுமணன், பத்தாம் வகுப்பு, புதுச்சேரி

ரா.முரளி, எட்டாம் வகுப்பு, மேட்டுப்பாளையம்

சுவாமி விவேகானந்தரின் இயற் பெயர் என்ன?

இதற்கும் சரியான விடையளித்த பலரில் இருவர் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சரியான விடை : **நரேந்திரநாத் தத்தா**

ஆர்.கே.கார்த்திக், ஏழாம் வகுப்பு, திசையன்விளை


வி.லட்சுமி, சென்னை - 61



இம்மாதக் கேள்விகள் :

1. டாக்டர் அப்துல் கலாம் மீண்டும் குடியரசுத் தலைவர் பணியைத் தொடரலாமா? அல்லது ஆசிரியராகலாமா? உங்கள் கருத்தைச் சுருக்கமாகச் சொல்லுங்கள்.
2. இளம் கிரிக்கெட் வீரர்களில் அடுத்த சச்சின் என்று யாரைச் சொல்வீர்கள்? காரணம்...
3. ராஜஸ்தான் மாநிலத்தின் தலைநகர் எது?
4. பதட்டம், பதற்றம் - எது சரியான தமிழ்ச் சொல்?
5. இராமரின் மனைவி சீதை. லட்சுமணன், பரதன், சத்துருக்னன் ஆகியோரின் மனைவியர் பெயர்கள் தெரியுமா?

ஒருவரே ஐந்து கேள்விகளுக்கும் விடையளிக்கலாம். ஆனால் ஓர் அஞ்சலட்டையில் ஒரு கேள்வி - பதில் மட்டுமே எழுத வேண்டும். **'அன்புடன் ஜக்கு'** என்று குறிப்பிட்டு அனுப்புங்கள்! **முடிவு தேதி : 10.4.2007.**



பெரியவர்கள் சொன்ன
குட்டிக் கதைகள் : 1



செடியின் ஆசை!

"அம்மா நானும் உன்னைப் போல் கசப்பாகத்தான் வளர வேணா?'' என்று பக்கத்திலிருந்த வேப்பமரத்தைப் பார்த்துக் கேட்டது வேப்பஞ்செடி.

''ஆமாம்'' என்றது வேப்ப மரம்.

''மருந்துக்கும் மந்திரத்துக்கும் மட்டும்தானே மக்கள் நம்மை அணுகுகிறார்கள்; ருசிக்காக வருவதில்லையே. ஆகவே நான் வெறும் வேப்பஞ்செடியாக இல்லாமல் கறிவேப்பஞ் செடியாக மாறப் போகிறேன்'' என்றது வேப்பஞ் செடி.

தாய் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேட்கவில்லை. விநாயகரைத் துதித்துக் கறிவேப்பிலையாக மாற வரம் பெற்றது. சிறிது வளர்ந்ததும் அக்கம் பக்கம் உள்ளவர்கள் இலைகளைப் பறித்துக் கொண்டு விட்டனர். மிச்சமிருந்த செடியை ஓர் ஆடு மேய்ந்து விட்டது. வேர் மட்டுமே பிழைத்தது.


''மகளே! அப்போதே சொன்னேனே, கேட்டாயா? அவரவரின் தனித் தன்மையுடன் இருப்பதே நல்லது. மீண்டும் விநாயகரைத் துதி'' என்றது அம்மா மரம்.

வேப்பஞ்செடிக்குப் புத்தி வந்தது. விநாயகரைத் துதித்து திரும்ப வரம் பெற்று, நன்றாக வளர்ந்தது; எல்லாருக்கும் பயனளித்தது. ●

எதிலும் அழகு!

கதை : பி.எஸ்.ஜேம்ஸ்
படம் : பிள்ளை




மேஜைமீது கைக்குட்டையை வைத்துவிட்டு அலங்காரத்தில் ஈடுபட்டிருந்தாள். அப்போது அங்கே வந்த நந்தினியின் செல்லப் பூனை...
ஏய்... என் கைக்குட்டை! சூ! போ அப்படி.
பூனையின் பாதத்திலிருந்த அழுக்கு அப்படியே கைக்குட்டையில் பதிந்து விட்டது. நந்தினி அழ ஆரம்பித்து விட்டாள்.
ஓ! என்னோட அழகான கைக்குட்டை நாசமாகிவிட்டதே. ம்... ம்...
நந்தினி அழாதே. சொன்னால் கேள்.
பலர் சமாதானம் செய்தும் நந்தினியின் அழுகை நிற்கவில்லை. அந்த சமயம் முனிவர் ஒருவர் வந்தார்.
நல்ல நேரத்தில் வந்தீர்கள். நீங்கள் தான் இளவரசியை சமாதானம் செய்யவேண்டும்.
ஆகட்டும் அரசே!
நந்தினி உன் கைக்குட்டை முன்பை விட இப்போதுதான் அழகாக உள்ளது.
என்ன சொல்கிறீர்கள்?


நன்றாகப் பார்! இந்தக் கைக்குட்டையில் முன்பு சுற்றிலும் மட்டுமே வேலைப்பாடு இருந்தது. நடுவில் வெண்மையாக, வெறுமையாக இருந்தது. இப்போது பூனையின் பாதச் சுவடுகள் படிந்து அது ஒரு வேலைப்பாடாகிவிட்டது.
ஆனால், அழுக்காக....
பொறு! அரசே ஓவியரை வரச் சொல்லி இந்த பாதச் சுவடுகள் மீது வண்ணம் தீட்டச் சொல்லுங்கள்.
ஆகா எவ்வளவு அழகாக உள்ளது!
இதைத்தான் சற்று முன்பு அழுக்கு என்று ஒதுக்கினாய். இப்போது அழகாகிவிட்டது.
எதிர்மறையான விஷயம் நடந்தால் சோர்ந்து விடக்கூடாது. அதையும் நமக்கு சாதகமாக்கும் வழியை யோசிக்க வேண்டும்.
மன்னியுங்கள்! இனிமேல் நான் எதையும் மகிழ்வுடன் ஏற்பேன்.



குறளும் கதையும்!

'இன்னா செய்தாரை...' எனும் திருக்குறளின் வரிகளை எடுத்துக் காட்டும் விதமாக 'சிங்கம் போட்ட வேலி' படக்கதை அமைந்திருந்தது. 'கோகுலம்' என்ற பெயர் வந்த விவரத்தை அறிந்தபோது ஆச்சர்யமாகவும் சுவாரஸ்யமாகவும் இருந்தது.

- வி.வேல்முருகன், முத்தம்பட்டி கேட்

போட்டியும் பயனும்!

சரியான நேரத்தில் வெளியான 'பரீட்சைக்கு ரெடி' கவர் ஸ்டோரி மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் கருத்துகள் சிறப்பாக இருந்தன. நன்றி!

- ஏ.ஏ.மேரி மீனா, ஆறாம் வகுப்பு புனித மணல் மாதா மேனிலைப் பள்ளி, சொக்கன் குடியிருப்பு

நினைவும் செயலும்!

மார்ச் இதழில் வெளியான 'நினைவு அட்டவணை'யைப் பல நகல்கள் எடுத்து நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பரிசாகக் கொடுத்தேன். எல்லோரும் என்னைப் பாராட்டினார்கள்.

- ஜி.பிரவீண்குமார், ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி மெட்ரிக். பள்ளி, விழுப்புரம்

நினைவு அட்டவணை சூப்பர்!



நானும் கோகுலமும்!


என் கையெழுத்து மிகவும் சுமாராகத்தான் இருக்கும். நன்றாக எழுத வேண்டுமென அப்பா-அம்மா பலமுறை சொல்வார்கள். கோகுலத்தில் சூப்பர் கையெழுத்து பகுதியைப் பார்த்ததும், இந்த கோடை விடுமுறையில் நன்றாக எழுதப் பயிற்சி மேற்கொள்வதென முடிவு செய்துள்ளேன்.

- நா.வருண், ஏழாம் வகுப்பு, அழகப்பா மெட்ரிக் பள்ளி, காரைக்குடி









பூக்களைக் கண்டுபிடியுங்கள்!





இங்கே ஐந்து மலர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நீங்கள் செய்ய வேண்டியது : குறிப்புகளைக் கொண்டு மலர்களின் பெயர்களைக் கண்டுபிடியுங்கள். விடையை ஓர் அஞ்சலட்டையில் எழுதி **'ஆசிரியர், கோகுலம் - கோடை விடுமுறைப் போட்டி-1'** என்று குறிப்பிட்டு கோகுலம் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்! மறக்காமல் உங்கள் பெயர், பள்ளி மற்றும் வீட்டு முகவரியைக் குறிப்பிட வேண்டும்.

சரியான விடையளிப்பவர்களில் பத்து பேர் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுத் தொகை ரூ.1000/- பகிர்ந்தளிக்கப்படும். **முடிவு தேதி : 30.4.2007.**

குறிப்புகள் :

1. வேதாளம் இந்த மரத்தில் ஏறிவிட்டது என்பர்.

2. சிவப்பு முத்துகளைப் போல் இதன் பழம் இருக்கும்.

3. ஒல்லி மரத்தில் காய்க்கும் குண்டுப் பழம். அணிலுக்கு மிகவும் பிடிக்கும்.

4. .... வேந்தன் என்றொரு தமிழ் நூல் உண்டு.

5. இந்தப் பூவை செவ்வந்தி என்றும் சொல்வார்கள்.



"தம்பி இந்த அட்ரஸ் எங்கே இருக்குன்னு தெரியுமா?"
"ஓ! உங்க கையிலதான் இருக்கு."

- எச்.சுல்த்தானா, கீழக்கரை

"ஒரு சூரியனுக்குப் பதில் பத்து சூரியன்கள் உதிச்சா என்ன ஆகும்?"
"'டென்'சன் ஆகும்!"

- ஆர்.பிரபு, சென்னை



"விருந்துல முதல்ல தண்ணிரை எதுக்கு வைக்கறாங்க?"
"குடிக்கத்தான்."

- எம்.சரவணன், வீரணம்



கோடை கடிகள்!

"முத்து குளிக்கிறதைப் பார்த்திருக்கேன்னு சொல்றியே, எங்கே பார்த்தே?"
"கிணத்தடியிலதான்."

-ஆ.விஜயலக்ஷ்மி, திருச்சி

"பழக்கடையில கேட்க வேண்டிய கேள்வியை எல்லாம் டீச்சர் உன் கிட்டே கேட்கறாங்களா...?"
"ஆமாம், ஆரஞ்சு எவ்வளவுன்னு கேட்கறாங்க."

- ஆர்.அருண்குமார், திருநெல்வேலி



ஏப்ரல் முதல் தேதி கொண்டாடப்படும் **முட்டாள்கள் தினம்** உலகப் புகழ் வாய்ந்தது. அன்றைய தினம் குறித்து வெவ்வேறு விதமான கதைகள் உலா வருகின்றன. 1582ஆம் ஆண்டு முதல் முட்டாள்கள் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது என்று சொல்கிறார்கள். பிரான்ஸ் நாட்டை ஆண்ட ஒன்பதாம் சார்லஸ் மன்னன், அதுவரை நடைமுறையில் இருந்து வந்த நாட்குறிப்பை மாற்றி, போப் ஆண்டவர் பதிமூன்றாம் கிரிகோரி அறிமுகப்படுத்திய கிரிகோரியன் முறை காலண்டரைப் பின்பற்ற வேண்டும் என உத்தரவிட்டார். அதற்கு முன்புவரை, ஏப்ரல் மாதம் முதல் தேதி இருந்து வந்த புத்தாண்டு, ஜனவரி முதல் தேதிக்கு மாற்றப்பட்டது. ஆனால் பிரான்சிலும் சரி... மற்ற நாடுகளிலும் சரி புத்தாண்டு தின மாற்றம் குறித்து தெரியாமல், மக்கள் ஏப்ரல் முதல் தேதியையே கொண்டாடி வந்தார்கள். இதையறிந்த மன்னரும் மற்றவர்களும், 'முட்டாள்தனமாக ஏப்ரல் முதல் தேதியைப் புத்தாண்டாகக் கொண்டாடி வருகிறார்களே' என்று கேலி செய்தார்கள். நாளடைவில், ஜனவரி முதல் தேதி புத்தாண்டாகவும், ஏப்ரல் முதல் தேதி முட்டாள்கள் தினமாகவும் உலகமெங்கும் கொண்டாடும் பழக்கம் துவங்கியது.

ஆண்டு தோறும் ஏப்ரல் 22ஆம் தேதி பூமி தினம் கொண்டாடப்படுகிறது. யுனெஸ்கோ அமைப்பின் அறிவிப்பின்படி கொண்டாடப்படும் பூமி தினத்தன்று உலகின் பல நாடுகளில் விடுமுறை விடப்படுகிறது. இந்த பூமி, மக்கள் வாழ்வதற்கு ஏற்ற வண்ணம் இருக்க வேண்டுமானால், ஒவ்வொரு மனிதரும் இயற்கை வளத்தைப் பாதுகாப்புக்கும், அதன் மேம்பாட்டுக்குப் பாடுபடுவதும் அவசியம் என்று வலியுறுத்தும் நாள்தான் பூமி தினம். மக்கள் அனைவரும் இயற்கையோடு கைகோத்து வாழ வேண்டும் என்பதே பூமி தின செய்தி. 1970ஆம் ஆண்டு முதல் பூமி தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஏப்ரல் 23ஆம் தேதி உலக புத்தகம் மற்றும் பதிப்புரிமை தினமாக கொண்டாடப்பட வேண்டுமென்று யுனெஸ்கோ அமைப்பினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதுதான் பிரபல

எஸ்.சந்திரமௌலி



ஆங்கில நாடக ஆசிரியரான வில்லியம் ஷேக்ஸ்பியரது பிறந்த தினமும், மறைந்த தினமும் ஆகும். மக்களிடையே - குறிப்பாக, இளைய தலைமுறையினரிடையே புத்தகங்களைப் படிக்கும் பழக்கத்தை வளர்ப்பதே இதன் நோக்கம்.

பிரிட்டனிலும் வேறு சில நாடுகளி

ஏப்ரல் 26ஆம் தேதியின் சிறப்பு என்ன தெரியுமா? பணியிடங்களுக்குக் குழந்தைகளை அழைத்துச் செல்லும் தினம். குழந்தைகள் தங்கள் பெற்றோர்கள் எங்கே பணி புரிகிறார்கள், அங்கே அவர்களுக்கு என்ன வேலை போன்ற விஷயங்களைத் தெரிந்து கொள்வது அவசியம் என்று கருதி, இப்படி ஒரு தினம் கொண்டாடப் படுகிறது. பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் இடையே நல்ல புரிதலை ஏற்படுத்த வேண்டும் என்பதே இந்த தினத்தின் நோக்கம். உலகமெங்கும், இலட்சக்கணக்கானவர்கள் இந்த தினத்தில், தங்கள் குழந்தைகளை, தங்கள் அலுவலகத்துக்கு மகிழ்ச்சியுடன் அழைத்துக் கொண்டு செல்கிறார்கள்.



பூமி தினம்!

லும் அரசாங்கமும் மற்ற அமைப்புகளும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு ஒரு சிறு தொகையை அன்பளிப்பாகக் கொடுத்து, புத்தகங்களை வாங்கும்படிச் செய்வது நடைமுறையில் இருந்து வருகிறது. நீங்கள் கூட உலக புத்தகம் மற்றும் பதிப்புரிமை தினத்தன்று புத்தகங்களைப் படித்தும், நண்பர்களுக்குப் புத்தகங்களைப் பரிசளித்தும் மகிழ்ச்சியுடன் கொண்டாடலாம்.





சூப்பர் கையெழுத்து!



உலகில் மக்களாய்ப் பிறந்தவருள் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்னும் வேறுபாடு இருத்தல் கூடாது. இதனை வற்புறுத்தவே வள்ளுவர் 'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்' என்று கூறினார். நம் இந்திய நாட்டைப் பல்லாயிரம் ஆண்டுகளாகச் சாதி அமைப்பு துன்பத்துக்கு உள்ளாக்கியது இந் நிலையை மாற்றிப் போராடி வெற்றி பெற்றவர் அம்பேத்கர்.

என்.ஜே.ஸ்ரபிநாத், ஒன்பதாம் வகுப்பு,
டி.வி.எஸ்.மெட்ரிக்குலேஷன் மே.நி.பள்ளி, மதுரை

1. காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்.
2. அளவுக்கு மிஞ்சினால் அமுதும் நஞ்சாகும்
3. ஆபத்துக்குப் பாவம் இல்லை.
4. ஆழமறியாமல் காலை விடாதே.
5. ஆனைக்கும் அடி சறுக்கும்.



சு.சுவேதா, மூன்றாம் வகுப்பு, டி.ஏ.வி. பள்ளி,
ஆதம்பாக்கம்



முத்துராமலிங்கத் தேவரின் நாட்டுப் பற்று: "

முத்துராமலிங்கத் தேவரின் காளைப் பருவத்தில் இந்தியா ஆங்கிலேயர் ஆட்சிக்கு அடிமைப்பட்டிருந்தது. இவர், நம் நாடு விடுதலை பெறவேண்டுமெனத் தணியா வேட்கை கொண்டிருந்தார். வங்கச் சிங்கமானார். இவருடைய பேச்சிலும் மூச்சிலும் விடுதலை உணர்வே மிளிர்ந்தது.

ஜெ.பி.அபிலாஷ், ஆறாம் வகுப்பு, ஸ்ரீசிவானந்தா
பாலவித்யாலயா, திருச்சி



- கடவுளை நம்பினோர் கைவிடப்படார்
- கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது
- கந்தையானாலும் கசக்கிக் கட்டு, கூழானாலும் குளித்துக் குடி
- குறைகுடம் கூத்தாடும்
- சிறு துரும்பும் பல் குத்த உதவும்

கி.உமா மகேஸ்வரி, ஐந்தாம் வகுப்பு,
ஸ்ரீ சீதாராம் வித்யாலயா மெட்ரிக் மே.நி.பள்ளி, சென்னை

சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிகள்.

- "நான் எதையும் சாதிக்க வல்லவன்" என்று சொல். நீ உறுதியுடன் இருந்தால் பாம்பின் விஷம்கூட சக்தியற்றதாகி விடும்.
- தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும். இவை அனைத்திற்கும் மேலாக அன்பு வேண்டும்.

இ.இராம்பிரசாத், ஒன்பதாம் வகுப்பு, ஸ்ரீராமகிருஷ்ணா வித்யாலயா குருகுலம், காரைக்கால்





சுற்றுப்புறச் சூழல் என்பது மனிதனைச் சுற்றியுள்ள காற்று, நீர், நிலம் ஆகியவற்றைக் கொண்டது. அத்தகைய சுற்றுப்புறம் தூய்மையாக இருத்தல் மிக அவசியம். ஆகவே அத்தகைய சுற்றுப்புறத்தைக் காக்க மரம் வளர்ப்போம், மழை பெறுவோம்.

பா.சுவாதி பிரியதர்ஷினி,
பதினொராம் வகுப்பு, ஸ்ரீஜெயந்திரர் சுவாமிகள் வெள்ளி விழா மே.நி.பள்ளி, திருநெல்வேலி

---

1. அன்புக்கு உற்பத்தி ஸ்தானம் — தாய்
2. அறிவுக்கு உற்பத்தி ஸ்தானம் — தந்தை
3. வாழ்க்கை என்பது ஒரு மலர்
4. [illegible] — இறைவன்
5. கஷ்டப்படாமல் வெற்றி — இல்லை


ஆர்.முகிலன், யு.கே.ஜி., சரஸ்வதி வித்யாலயா மெட்ரிக்குலேஷன் பள்ளி, திருநெல்வேலி



மெல்லுடலிகளும் விசித்திரங்களும்!

ஆழி——

உலகில் உள்ள பிராணிகளை 'முதுகெலும்பு உள்ளவை', 'முதுகெலும்பு இல்லாதவை' என இரு பெரும் பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். முதுகெலும்பு இல்லாதவற்றுள் 'மெல்லுடலிகள்' என்று ஒரு பிரிவும் உண்டு. கடலில் வாழும் மெல்லுடலிகளில் 1,60,000 வகைகள் இருக்கின்றன.




சில மெல்லுடலிகளுக்கு ஓடு உடலின் மேலே இருக்கும்.




சில மெல்லுடலிகளுக்கு ஓடு உடலின் உள்ளே இருக்கும்.

மெல்லுடலிகள் சிலவற்றின் அமைப்பும் பழக்கவழக்கங்களும் விசித்திரமானவை.

'ஆக்டோபஸ்' என்னும் பிராணிதான் மெல்லுடலிகளிலேயே அதிகம் மூளை வளர்ச்சி உடையது. இதற்கு 8 கைகள் இருப்பதால்தான் 'ஆக்டோபஸ்' என்று பெயர். முத்துக்குளிப்பவர்களுக்கு இது மிகவும் ஆபத்தானது. அவர்களை இது தன் கைகளால் வளைத்துப் பிடித்து நீருக்குள் இழுத்துச் சென்று கொன்றுவிடும். இதன் விஷம் 2 மணி நேரத்திற்குள் மரணத்தை ஏற்படுத்திவிடும்!






ஆக்டோபஸ்ஸின் இரை: கிளிஞ்சில்கள், நண்டுகள், சிப்பிகள், மீன்கள். இதற்குப் பசி வந்துவிட்டால்— இரை ஒன்றும் கிடைக்காவிட்டால்— தன் கைகளில் ஒன்றைக் கடித்துத் தின்றுவிடும்! ஆனால், நாளடைவில், அந்தக் கை முன்போலவே வளர்ந்துவிடும்! ஆக்டோபஸ்ஸில் சுமார் 100 வகைகள் இருக்கின்றன.




உலகில் உள்ள மெல்லுடலிகளில் மிகவும் பெரியது ராட்சச 'ஸ்குயிட்'. இதைக் 'கணவாய் மீன்' என்றும் சொல்வார்கள். 18 மீட்டர் நீளத்திற்கு மேல் வளரக்கூடியது இது! இதற்கு 8 கைகளும், முன்னே இரண்டு கொடுக்குகளும் உள்ளன. இதன் உடலுக்குள் ஓடு உண்டு.




'கட்டில் மீன்' என்னும் மெல்லுடலி, தான் செல்கின்ற இடத்திற்கேற்ப, தன் நிறத்தை மாற்றிக் கொள்ளும்—பச்சோந்தி மாதிரி! இது பழுப்பு, வெள்ளை, பழுப்புக் கோடுகள் என மூன்று விதங்களில் நிறம் மாறுகிறது!




கடல் நத்தைக்கு மேலே ஓடு உண்டு. இது பிறந்தது முதல் ஆயுள் முழுவதும் தலைகீழாகவே வாழக்கூடியது—வௌவால் மாதிரி! இது தன் வாயிலிருந்து நுரையை வெளிப்படுத்தி, நீரில் மிதக்கவிட்டு, அதன் அடியில் தலைகீழாக ஒட்டிக் கொள்ளும். இந்த நத்தையிலிருந்து நோயை எதிர்க்கக்கூடிய 'ஆன்ட்டி பயாடிக்' மருந்து தயாரிக்கப் படுகிறது.



குடை போன்ற 'ஜெல்லி மீன்கள்' 65 கோடி ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியவை. மிகப்பெரிய ஜெல்லி மீனின் உடல் 2.5 மீட்டர் குறுக்களவு கொண்டது. இதன் நீண்ட கயிறு போன்ற உணர் உறுப்புகள் 60 மீட்டர்களுக்கு மேல் நீளமானவை!




'கடல் குளவி' என்னும் ஜெல்லிமீன் மிகுந்த விஷம் கொண்டது. இதன் விஷம் ஒரு மனிதனை மூன்று நிமிடங்களுக்குள் கொன்றுவிடும்!



'போர்த்துகீசிய போர்வீரன்' என்பதும் ஜெல்லிமீனின் வகைதான். இதற்கு 2 மீட்டர்கள் முதல் 30 மீட்டர்கள் வரை நீளம் உள்ள கயிறு போன்ற உறுப்புகள் உண்டு. கயிறுகளின் முனையில் உள்ள விஷக் கொடுக்குகளால் இரையைக் குத்தி, மயக்கமடையச் செய்து தின்கிறது.

'கிளிஞ்சில்' இரு மடிப்பு ஓடுகளினால் மூடப்பட்ட ஓர் உயிரினம். இதன் வயதை யார் வேண்டுமானாலும் கண்டுபிடித்துவிடலாம். இதன் ஓட்டின்மேல் எத்தனை வளைவு கோடுகள் இருக்கின்றனவோ, அத்தனை ஆண்டுகள் இதன் வயது!






சிப்பியின் உடலுக்குள் முத்து உருவாகிறது. உலகில் அதிக ஆண்டுகள் உயிர்வாழும் மெல்லுடலி சிப்பிதான். பிலிப்பைன்ஸ் தீவுகளின் கடல் பகுதியில் ஒரு சிப்பியைக் கண்டுபிடித்தார்கள். அதன் வயது 450 ஆண்டுகள்!



சில வகைக் கிளிஞ்சல்கள், எதிரிகளிடமிருந்து தப்பிக்க கரிய நிறத்தில் ஒருவித மையை நீரில் வெளிவிடுகின்றன. இந்த மை நீரில் கரையாமல், கிளிஞ்சல் வடிவத்திலேயே பரவியிருப்பதால் எதிரிகள் ஏமாந்துவிடுகின்றன!






சிப்பிகளில் 100க்கு மேற்பட்ட வகைகள் உள்ளன. 2 செ.மீ. நீளம் முதல் 90 செ.மீ. நீளம் வரை வளரக்கூடியவை சிப்பிகள். ஒரு சிப்பி ஒரு பருவத்தில் கோடிக்கணக்கான முட்டைகள் இடுகிறது. முட்டையிலிருந்து வெளிவந்து ஒரு நாள் ஆன பிறகே சிப்பிக்கு ஓடு உண்டாகிறது!

'டிரிடாக்னா' என்னும் மெல்லுடலி 1.5 மீட்டர் வரை அகலம் இருக்கும். கடலில் முத்துக் குளிப்பவர்கள் இதனிடம் சிக்கிவிட்டால் மரணம்தான். இது தன் இரண்டு மேல் ஓடுகளின் மடிப்புக்கு இடையே மனிதனை வைத்து இருக்கும்போது அவனுடைய எலும்புகள் நொறுங்கிவிடும்!

'ஓட்டுமீன்' என்னும் மெல்லுடலி 220 ஆண்டுகளுக்கு மேல் உயிர் வாழும். இதன் உடலிலிருந்து போலியோ நோய் தடுப்பு மருந்து தயாரிக்கப் படுகிறது.





கடலின் அடியில் வாழும் 'காஸ்ட்ரோபாட்' என்னும் நத்தை வளர வளர, அதன் ஓடும் அடுக்கு அடுக்காக வளரும். ஓர் அடுக்கில் அதன் வளர்ச்சி முடிந்ததும், அடுத்த அடுக்கு வளர்ந்து, அதற்குள் அதன் உடல் நுழைந்துவிடும்.

போட்டி

பரிசு ரூ.1000/-



கோப்பை யாருக்கு?

குதூகலத்துடன் துவங்கிவிட்டது- ஒன்பதாவது உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டி! எங்கு பார்த்தாலும் இதே பேச்சு. நிறைய பத்திரிகைகள் பரிசுப் போட்டியும் அறிவித்துள்ளன. இதோ உங்களுக்காக கோகுலம் நடத்தும் போட்டி.

இந்த முறை கோப்பையை வெல்லப் போகும் அணி எது? இதற்கான பதிலை யூகித்து எழுதுங்கள். அத்துடன் உங்கள் யூகத்துக்கான காரணம், மற்ற அணிகளின் பலவீனம் ஆகியவற்றையும் அலசி, ஒரு வெள்ளைத்தாளில் பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விமர்சனம் எழுதியனுப்புங்கள்.



சரியான விடை, சிறந்த விமர்சனக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படும். ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது. படிக்கும் வகுப்பு, பள்ளி பெயர், வீட்டு முகவரி ஆகியவற்றை மறக்காமல் குறிப்பிட வேண்டும். கொடுக்கப்பட்டுள்ள முகவரிக் கூப்பனைக் கட்டாயம் ஒட்ட வேண்டும்.

முடிவு தேதி : 16.4.2007

ஆசிரியர்,
கோகுலம்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை-600 032




அது என்ன பேஜாரு?

நந்தினி தனது அம்மாவுடன் காய்களை வாங்குவதற்காக கடைவீதிக்கு வந்திருந்தாள். அம்மா கடைக்காரரிடம் பேரம் பேசினாள்.

"இதோ பாரும்மா, நீ நேத்து விலையைப் பத்தியே பேசிக்கினு இருக்காதே. ஒரு மூட்டை வெங்காயம் எவ்ளோன்னு தெரியுமா? அதுல கெட்டுப் போனது எல்லாம் இருக்கும். உங்களை மாதிரி நாங்க அதைத் தனியா எடுத்துட்டு வாங்க முடியாது'' என்றார் கடைக்காரர்.

''நல்லா இருக்கே கதை! அதுக்காக நாங்க அழுகிப் போனதை வாங்கிட்டுப் போக முடியுமா?" என்று சூடாகக் கேட்டாள் அம்மா.

• பேட்ஜர்



"அப்படிச் சொல்லலைம்மா. ஒரு ரூவாவுக்குப் பேரம் பேசாதீங்கன்னு சொல்றேன்."

"ஒரு ரூபாய் சும்மாவா வருது? சரி, சரி! கொடுக்கறேன். எடையைச் சரியா போடுப்பா!"

"சரியாத்தான் போடறேன்."

''எங்கே சரியா இருக்கு? இன்னொரு வெங்காயம் போடு. அப்பதான் சரியா இருக்கும்."

''இன்னாம்மா உன்னோட பேஜாரா போச்சு! இந்தா போட்டாச்சு. போதுமா?" என்றார் கடைக்காரர்.

இருவரும் அந்தக் கடையை விட்டு விலகி நடந்தனர். நந்தினிக்கு அம்மா மீது கோபம். "ஏம்மா ஒரு வெங்காயத்துக்காக வாக்குவாதம் செய்யறே?" என்று கேட்டாள்.

''அதுல என்ன தப்பு? நந்தினி, நாம ஒண்ணும் அடாவடியா தட்டிப் பறிக்கலை. கொடுக்கிற பணத்துக்கு நமக்குச் சேர வேண்டியதைத் தானே கேட்கறோம்?'' என்றாள் அம்மா.

''சரியாச் சொன்னீங்க'' என்று பின்னால் குரல் கேட்டது.

இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். தமிழரசன் கையில் பையுடன் இருந்தார்.

"நீங்க பேசினதை எல்லாம் கேட்டுட்டுத்தான் இருந்தேன். நமக்கு நியாயமாச் சேர வேண்டியதைக் கேட்டு வாங்கறதுல தப்பே இல்லை. அது நம்ம உரிமை" என்றார்.

''ஆனா கடைக்காரர் ரொம்ப அலுத்துக்கறாரே பேஜாரு அது, இது'ன்னு... அண்ணா, பேஜாருங்கறது என்ன சொல், தமிழா?" என்று கேட்டாள் நந்தினி.

"இல்லை, நந்தினி. பேட்ஜர் (Badger) என்கிற ஆங்கில வார்த்தைதான் பேஜாராகி இருக்கு. இதுக்குத் 'தொல்லை கொடு' 'எரிச்சலூட்டு', 'சீண்டு' என்று பொருள். ஆங்கிலத்தில் badgering என்று

சா.ஜெயராஜ்



இதைச் சொல்வார்கள். தமிழில் மட்டுமன்றி கன்னடத்தில்கூட இது அந்த மொழிச் சொல்லைப் போலவே பயன்படுத்தப்படுது" என்றார் தமிழரசன்.

"இத்தனை நாளா 'பேஜார்' என்பதை மெட்ராஸ் தமிழ் பாஷை என்றே நான் நினைச்சுட்டு இருக்கேன்" என்றார் அம்மா.

"இதுல இன்னொரு சுவராஸ்யமான விஷயம், பேட்ஜர் என்றொரு விலங்கு உண்டு. அது தனது கால் நகங்களைக் கொண்டு மண்ணை வேகமாகச் சுரண்டுமாம்!"

"அண்ணா, எனக்கு இன்னொரு சந்தேகம். ஓர் ஆட்டு மந்தையோ, மாடுகளோ கூட்டமா வருவதைக் குறிப்பிடும்போது அவைகள் வந்தன என்றுதானே சொல்லணும்?" என்று கேட்டாள் நந்தினி.

"தப்பு நந்தினி, 'அது' என்ற சொல்லின் பன்மைதான் அவை. ஓர் ஆட்டைக் குறிப்பிட 'அது' என்ற வார்த்தையைப் பயன் படுத்தணும். ஒன்றுக்கு மேற்பட்டு இருந்தால் 'அவை' என்றே குறிப்பிடணும். 'அவைகள்' என்று சொன்னால் பன்மை இரட்டிப்பாகி விடும்" என்றார் தமிழரசன்.

மூவரும் பேசிக்கொண்டே கடைவீதியில் நடந்தார்கள்.

தமிழ் வார்த்தைகளைப் பயன்படுத்துவதில் உங்களுக்கு ஏற்படும் சந்தேகத்தை கோகுலத்துக்கு எழுதி அனுப்புங்கள்!





இ.கலைநேசன்,
எட்டாம் வகுப்பு,
சாரதா
மெட்ரிக்குலேஷன்
பள்ளி, செஞ்சி

→



←

பி.ஜெயக்குமார்,
ஒன்பதாம் வகுப்பு,
நம்பியூர்

உங்கள் கைவண்ணம்!






↑


எம்.விக்னேஷ்,
ஏழாம் வகுப்பு,
சின்னச்சாமி அம்மாள்
நகராட்சி உயர்நிலைப் பள்ளி,
திருப்பூர்







ஏ.சுவாதி,
ஆறாம் வகுப்பு,
முருகதனுஷ் கோடி
மகளிர் மே.நி.பள்ளி,
சென்னை





வி.திவ்யபிரகாஷ்,
எட்டாம் வகுப்பு,
அரசினர் உயர்நிலைப் பள்ளி,
பொள்ளாச்சி

• **பார்வதி மகேந்திரன், சென்னை**

? வெயிலில் வைட்டமின்-டி உள்ளது என்கிறார்கள். எப்படி, டாக்டர்?

! வெயிலில், அதாவது - சூரிய ஒளியில் வைட்டமின் எதுவுமில்லை. சூரிய ஒளியில் புற ஊதாக்கதிர்கள் உள்ளன. நம் தோலில் உள்ள ஒருவித கொலஸ்டிராலின் மீது இந்தப் புற ஊதாக் கதிர்கள் படும்போது தோல் தான் வைட்டமின் - டியைத் தயாரிக்கிறது. இந்த வைட்டமின் உற்பத்தி அளவு தோலின் நிறத்தைப் பொருத்து உள்ளது. மேல்நாட்டினரைப் போல் வெள்ளைத்தோல் உள்ளவர்கள் குறைந்த நேரமே வெயிலில் இருந்தால் போதும்; கறுப்புத்தோல் உள்ளவர்கள் அதிக நேரம் வெயிலில் இருந்தால் தான் அவர்களுக்குத் தேவையான அளவுக்கு வைட்டமின்-டி கிடைக்கும்.

குளோனிங் காபி!

• **உ.அன்புமலர், பெங்களூர் -20**

? என் கன்னம் சதையே இல்லாமல் ஒட்டியுள்ளது. கன்னம் புஷ்டியாக என்ன உணவு சாப்பிடலாம், டாக்டர்?

! கைக்குத்தல் அரிசி சாதம் மற்றும் உமி நீக்கப்படாத கோதுமையில் செய்த சப்பாத்தி, பூரி போன்றவற்றைச் சாப்பிட வேண்டும். ஒரு கிலோ உடல் எடைக்கு ஒரு கிராம் வீதம் தினமும் புரதச் சத்துணவுகளைச் சேர்க்க வேண்டும். குறிப்பாக உளுந்து, துவரம்பருப்பு, கொண்டைக் கடலை, கண்டல், முளை கட்டப்பட்ட பயறு வகைகள் நல்லது. தினமும் 500 மி.லி. பால், ஒரு முட்டை, இரண்டு வேளை தயிர் சாப்பிடவும். வாரம் இருமுறை கோழி இறைச்சி, மீன் சாப்பிடலாம். எள்ளுருண்டை, அவல் பாயாசம் போன்றவற்றைச் சிற்றுண்டியில் சேர்த்துக் கொள்ளவும்.



• **ஆ.பரத், கும்பகோணம்**

? என் பாதங்களில் வெடிப்பு உள்ளது. செருப்பு இல்லாமல் நடக்கும் போது வலி ஏற்படுகிறது. இதைக் குணப்படுத்த என்ன செய்வது, டாக்டர்?

! பாதங்களில் ஈரப்பதம் குறையும் போது தோல் வறண்டு வெடிப்பு உண்டாகும். மருத்துவரிடம் நேரில் ஆலோசனை பெற்று 'ஈரம் தரும் களிம்பைப் பாதங்களில் தடவி வந்தால் வெடிப்புகள் மறைந்துவிடும்.

• **ப.எழிலன், சென்னை - 73**

? என் தலையில் பொடுகு உள்ளது. முடி கொட்டுகிறது. இதற்கு என்ன செய்யலாம், டாக்டர்?

டாக்டர் கு.கணேசன்





! உங்கள் தலையில் உள்ளது பொடுகா அல்லது வேறு ஏதேனும் தோல்நோயா என்று தெரிந்துகொள்ள வேண்டும். பொதுவாக, தோலில் எண்ணெய்ப்பசை அதிகமாக உள்ளவர்களுக்குப் பொடுகு வரும் வாய்ப்பு அதிகம். பூஞ்சைத் தொற்று உண்டானால் தலை அரிப்பு, முடி உதிர்தல், தோல் உதிர்தல் போன்றவை தொல்லை தரும். 'செலினியம்', 'கீட்டகெனசோல்', 'புளுக்கெனசோல்' என்று தரமான பொடுகு நீக்கும் மருந்துகள் பல உள்ளன. குடும்ப மருத்துவர் யோசனைப்படி ஒன்றைத் தலையில் தேய்த்துக் குளித்தால் பொடுகு குணமாகும். உங்களுக்கென்று தனி சீப்பு, துவாலை பயன்படுத்தவும்.

• **இ.சே.அறிவழகன், திருப்புலிவனம்**

? தலைவலி ஏன் வருகிறது? அது வராமலிருக்க என்ன செய்ய வேண்டும்?

! தலைவலிக்குப் பல காரணங்கள் உள்ளன. காய்ச்சல் தலைவலி, சைனஸ் தலைவலி, ஒற்றைத் தலைவலி, கொத்துத் தலைவலி, மன இறுக்கத்தால் ஏற்படும் தலைவலி, கண், காது, மூக்கு, மூளை, பல் போன்ற உடல் உறுப்பு சார்ந்த தலைவலி, ஒவ்வாமைத் தலைவலி என்று அடுக்கிக்கொண்டே போகலாம். ஆகவே, தலைவலிக்குக் காரணம் தெரிந்து சிகிச்சை பெறுவது நல்லது.

• **பி.யஷ்வந்த், சேலம்**

? வாழைத் தண்டு சாப்பிட்டால் சிறுநீரகத்தில் உள்ள கல் கரைந்து விடுமா?

! வாழைத்தண்டு சாப்பிட்டால் சிறுநீர் நன்றாகப் பிரியும். அப்போது சிறுநீரகத்தில் உள்ள மிகச் சிறிய கற்கள் கரைந்து வெளியேற வாய்ப்புண்டு.

தகவல் பெட்டி

1. நம் உடலின் வெப்பநிலையை சமன் செய்யும் உறுப்பு மூளையில் உள்ள 'ஹைப்போதலாமஸ்.'


2. நம் எலும்பு மூட்டுகளை நேரடியாகப் பரிசோதிக்க உதவும் பரிசோதனை முறை 'ஆர்த்தோஸ்கோப்பி'.


4. இங்கிலாந்து நாட்டில் குளோனிங் முறையில் புதிய காபிச் செடியை உருவாக்கியுள்ளனர். இதில் உடலுக்குத் தீங்கு செய்யும் 'கஃபீன்' எனும் நச்சுப் பொருள் இல்லை. காப்பியின் அசல் மணமும் சுவையும் அப்படியே உள்ளன!

5. ஒரு நிமிடத்தில் நம் தோல் உதிர்க்கும் இறந்த செல்களின் எண்ணிக்கை 30000. அப்படியென்றால் ஒரு நாளில்? 30000 x 60 x 24. என்ன, மலைப்பாக உள்ளதல்லவா?

வாண்டுதாசன்

பார்த்து விளையாடு பாப்பா!





பார்த்து விளையாடு பாப்பா - நீ
பாதுகாப்பாய் விளையாடு பாப்பா
மண்ணில் கைகளை நீ வைத்தால் - பின்
மறவாமல் கழுவிக்கொள்ளு பாப்பா!

கூர்மையான பொருளைக் கொண்டு - நீ
விளையாடக் கூடாது பாப்பா
மும்முரமான ஆட்டப் பொழுதில் - அது
முகத்தில் பட்டுவிடும் பாப்பா!

தகிக்கும் வெயில் காயும் நேரம் - நீ
தெருவுக்குப் போகாதே பாப்பா

குளிர்ந்த மாலை வரும் வேளாய் - பின்
குதூகலமாய்ச் சென்றிடு பாப்பா!

வீட்டினிலே விளையாடும் சமயம் - மிகக்
கூச்சல் நீ போடாதே பாப்பா
வயது முதிர்ந்த பெரியோர் - பலர்
வீட்டில் இருப்பாரே பாப்பா!



உன்னிலும் சிறியோராய் இருப்பின் - நீ
இதமாக நடக்கவேணும் பாப்பா
அறியாது அவர்செய்யும் தவறை - நீ
சினமின்றி பொறுக்கணும் பாப்பா!

நண்பனோடு விளையாடும் பொழுதில் - நீ
சண்டையிடக்கூடாது பாப்பா
ஒற்றுமையாய் ஆடவேணும் பாப்பா - இதை
ஒருநாளும் மறக்காதே பாப்பா!





கோகுலம் தீம் பார்க்
வேடிக்கை விளையாட்டு புதிர் உலகம்
உங்களை
அன்புடன் வரவேற்கிறது
உங்கள் சின்னஞ்சிறு கைகள்,
பளபள கண்கள், சுட்டியான மூளை
அனைத்துக்கும் சவால்!


வண்ணம் தீட்டுங்கள்!

இங்குள்ள படத்துக்கு வண்ணம் தீட்டி அழகுப்படுத்துங்க!



யார் எங்கே செல்வது?






இங்கு நான்கு விளையாட்டு வீரர்கள் உள்ளனர். எதிரே அவர்கள் செல்ல வேண்டிய இடங்கள் உள்ளன. யார், எங்கே செல்ல வேண்டும்? சரியான விடைக்கு நீங்கள் செல்ல வேண்டியது 47-ஆம் பக்கம்.

கோகுலம்

எத்தனை வித்தியாசங்கள்?

இரண்டு படங்களுக்கிடையே எத்தனை வித்தியாசங்கள் உள்ளனவென்று கண்டுபிடியுங்கள்! **விடை 47-ஆம் பக்கம்.**






நிறங்களைக் கண்டுபிடி!



இங்குள்ள கட்டத்தில் இடமிருந்து வலம், வலமிருந்து இடம், கீழிருந்து மேல், மேலிருந்து கீழ் மற்றும் குறுக்கு வாக்கில் வண்ணங்களின் பெயர்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்க பார்க்கலாம்!

விடை 47-ஆம் பக்கம்.

விடை 47-ஆம் பக்கம்.



நீ	ம	ர	ஞ்	ற	நீ	ஸ்	சீ	ஞ்	ர
இ	ர	ம்	இ	ம்	ள்	ம்	சி	ஏ	க
ஜெ	தா	நி	ா	வு	ர	டு	வ	ஏ	ரு
ம்	ஜி	ஈ	ழ	தி	ப்	சு	ப்	ஞ்	நீ
ரு	தீ	ப	லை	பு	ல	பு	ம்	நீ	ல
வெ	ய	த்	ல	ட்	ம	நீ	நி	கா	ரி
ஜா	ப	சை	ச்	வ	த்	ஜா	ட	ஐ	ற
ஸ	ச்	ர	ஐ	சி	வ	ப்	பு	கா	ம்
ர	க்கு	ஆ	ம	ஷ	தி	சு	த்	ர	ஆ


- ஜி. புஷ்பநாதன்,
சென்னை



வெட்டுங்கள்!


இங்கே மூன்று புகைப்படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு புகைப்படத்திலிருந்தும் தலா இரண்டு துண்டுகள் வெளியே உள்ளன. அவற்றை வெட்டியெடுத்து எந்த துண்டு எங்கே வருமெனப் பார்த்துப் பொருத்துங்கள்.





ஓட்டுங்கள்!

குட்டீஸ் கோகுலம்





கிரிக்கெட் க்விஸ்!











திரும்பிய பக்கமெல்லாம் கிரிக்கெட் பேச்சுத்தான். இதோ, இங்கே உங்களுக்காக 'கிரிக்கெட் க்விஸ்' கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு விடைகள் தரப்பட்டுள்ளன. சரியான கட்டத்தில் டிக் (✓) அடியுங்கள்.

1. லெக்-சைட் ஸ்கொயரில் இரண்டுக்கு மேற்பட்ட ஃபீல்டர்கள் நிறுத்தப்பட்டால் அப்போது வீசப்படும் பந்து 'நோ-பால்' ஆகும்.

☐ சரி ☐ தவறு

2. விக்கெட் கீப்பர் பிடிக்கும் கேட்ச்சை இப்படிச் சொல்வார்கள்.

☐ காட் அண்ட் பவுல்ட்

☐ காட் பிஹைண்ட்

3. 1987ஆம் ஆண்டு உலகக் கோப்பைப் போட்டியை இரண்டு நாடுகள் இணைந்து நடத்தின. அவை...

☐ ஆஸ்திரேலியா - நியூஸிலாந்து ☐ இந்தியா - பாகிஸ்தான்

4. அதிகமான உலகக் கோப்பைப் போட்டிகளில் விளையாடிய வீரர்...

☐ லாரா ☐ சச்சின்

5. டெஸ்ட் அந்தஸ்தே பெறாத ஓர் அணி உலகக் கோப்பைப் போட்டியில் அரையிறுதி வரை சென்றுள்ளது. அந்த அணி...

☐ கென்யா ☐ ஜிம்பாப்வே

6. உலகக் கோப்பைப் போட்டியில் அதிக விக்கெட்களை வீழ்த்திய முன்னாள் வீரர்

☐ வாசிம் அக்ரம் ☐ ஜவகல் ஸ்ரீநாத்

7. உலகக் கோப்பை சின்னத்தின் பெயர்...

☐ மெல்லோ ☐ டிங்-டிங்









8. கிரீஸில் நின்றிருக்கும் பேட்ஸ்மேனின் கால் ஸ்டம்பில் பட்டு விழும் விக்கெட்டை இப்படிச் சொல்வார்கள்.

☐ கோல்டன் விக்கெட்

☐ ஹிட்-விக்கெட்

9. ஒரு வீரர் ஆட்டமிழந்ததும் அடுத்த வீரர் மைதானத்துக்கு வரவேண்டிய கால அவகாசம்

☐ மூன்று நிமிடங்கள்

☐ ஐந்து நிமிடங்கள்

10. இந்த உலகக் கோப்பைப் போட்டியில் இந்திய வீரர்கள் அணிந்துள்ள சீருடையின் நிறம்...

☐ நீலம் ☐ வெளிர் நீலம்

விடைகள் 47-ஆம் பக்கம்.



விடுகதைகள்:

கிரீடம் வைத்த மகாராணி!

I. 1. பூக்கும் காய்க்கும்; ஆனால் காக்கா உட்கார இடமில்லை - அது என்ன?

2. மூன்று கொண்டை போட்டவள், முகமெல்லாம் அழுக்கு - அது என்ன?

3. ஆயிரம் நூல் பின்னலாம்; அவித்து உண்டால் ஆகா சுவையாம். - அது என்ன?

4. சின்னத் தம்பி சிவப்புத் தம்பி; திறந்த வாய் மூடாத நல்ல தம்பி அவன் யார்?

- எஸ்.சுதாகர், ஐந்தாம் வகுப்பு, வந்தவாசி

II. 1.கிரீடம் வைத்த மகாராணி; தொட்டால் முள்ளாய்க் குத்துவாள் - அவள் யார்?

2. எத்தனையோ கைகள் இருக்கும்; ஒரே ஒரு காலில் நிற்கும் - அது என்ன?

3. கையில்லை காலில்லை மரத்தை சாய்ப்பான்; வாயில்லை குரலில்லை சத்தம் செய்வான் - அவன் யார்?

4.ஒற்றைக் கண்ணுடையவன் ஓடி ஓடி வேலி அமைப்பான் - அவன் யார்?

- ஜெய்னம்பு, இராமநாதபுரம்

III.1. சிவப்பு உறைக்குள் சில்லறை கொட்டியிருக்கு - அது என்ன?

2. உருண்டையான வெள்ளைக் குடம்; விழுந்தால் ஓட்டைக்குடம் - அது என்ன?


3. மொட்டைப் போட்டால் மூடிய கண்கள் மூன்றுண்டு. அது என்ன?

- ஆர்.அம்பிகா, மதுரை

விடைகள் :

I. 1.நெற்கதிர் 2.அடுப்பு 3.இடியாப்பம் 4.தபால்பெட்டி
II.1.அன்னாசிப்பழம் 2.குடை 3.புயல்காற்று 4.தையல் ஊசி
III.1.மிளகாய் 2.முட்டை 3.தேங்காய்

புள்ளிகளை இணையுங்கள்!



ஒன்று முதல் முப்பத்தொன்பது வரையிலான புள்ளிகளை இணைத்தால் சூரியன் முறைப்பது யாரைப் பார்த்து என்பது தெரியும்.

எத்தனைப் பேர்?

இந்த ரயில் நிலையத்தில் யார், யார் எத்தனை பேர் உள்ளனர் என்பதைக் கண்டுபிடித்து வலப்பக்கம் கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் பூர்த்தி செய்யுங்கள்! விடை 47-ஆம் பக்கம்.



எத்தனைப் பேர்?



- ரயில் நிலைய ஊழியர்கள்
- சிறுவர்கள்
- சிறுமிகள்
- ஆண்கள்
- பெண்கள்
- குழந்தைகள்

குங்குமம் கோகுலம்

கூடையை அடைய...



மூன்று வழிகளில் எந்தப் பக்கம் போட்டால் பந்து கூடையை அடையும்? வழி தேடிப் பாருங்கள்!

விடைகள் பக்கம்



யார் எங்கே செல்வது?
விடை : 1 - D, 2 - C, 3 - A, 4 - B

கிரிக்கெட் க்விஸ் விடைகள் :
1.சரி 2.காட் பிஹைண்ட்
3.இந்தியா-பாகிஸ்தான்
4.சச்சின் 5.கென்யா
6.வாசிம் அக்ரம்
7.மெல்லோ
8.ஹிட்-விக்கெட்
9.மூன்று நிமிடங்கள்
10.வெளிர் நீலம்

கட்டத்திலுள்ள நிறங்கள் :
1.மஞ்சள் 2.ஆரஞ்சு
3.நீலம்
4.கருநீலநிறம்
5.சிவப்பு 6.பச்சை
7.ஊதா

எத்தனைப் பேர்? எத்தனைப் பேர்?
ரயில் நிலைய ஊழியர்கள் - 5
சிறுவர்கள் - 4
சிறுமிகள் - 3
ஆண்கள் - 18
பெண்கள் - 12
குழந்தைகள் -2

வித்தியாசங்கள் :
1.வீட்டின் கூரை
2.எலியின் பல்
3.புழுவின் வாய்
4.குருவியின் வால்
5.பூக்களின் எண்ணிக்கை

சவால்!



உங்கள்
பொறுமைக்கும்
மனத்தை ஒரு
நிலைப்படுத்தும்
தன்மைக்கும் ஒரு
சவால்! இங்குள்ள
படத்தில்
மொத்தம்
எத்தனை
ஜன்னல்கள்,
கார்கள் உள்ளன?
ஒரு கூர்மையான
பென்சிலைக்
கொண்டு
பொறுமையாக
எண்ணிக்
கண்டுபிடியுங்கள்!


தேன் துளிகள்



தெரியுமா? தெரியுமா?

★ ஒரு வாழைப்பழத் தோல் மக்குவதற்கு 3 முதல் 4 வாரங்கள் ஆகும். ஆனால் பிளாஸ்டிக் பை மக்குவதற்கு ஒரு மில்லியன் ஆண்டுகள் பிடிக்கும்.

★ மனித உடலில் எந்த உபயோகமும் இல்லாமல் 180 உறுப்புகள் உள்ளன. அவற்றில் ஒன்று 'அபெண்டிக்ஸ்' எனப்படும் குடல் வால். ஆனால் தாவரங்களை உண்டு வாழும் முயல், கங்காரு போன்ற விலங்குகளுக்கு இது மிகவும் முக்கியமானது.





★ ஒரு மின்னலின் சராசரி நீளம் 6 கி.மீ.

★ மனிதன் வாழ்நாளில் சராசரியாக அருந்தும் தண்ணீரின் அளவு 60,000 லிட்டர்.

★ உலகிலேயே மிக வேகமாக வளரும் தாவரம் மூங்கில்.

★ எகிப்து நாட்டில் பருத்தி 'வெள்ளைத் தங்கம்' என அழைக்கப்படுகிறது.

★ நாய்க்கு நாக்கில்தான் வியர்க்கும்.

- பொன்.சொர்ணவேல்

பூம்... பூம்... பூதம்!



ஒரு முட்டாள் பூதம் இரவு நேரத்தில் அந்த கிராமத்துக்குள் வந்தது.
நான் வர்றது தெரிஞ்சு மனுஷங்க வீட்டுல முடங் கிட்டாங்க போலி ருக்கு.
பிறகு...
அங்கே என்ன சத்தம்?
குழந்தையின் அழுகை...
வீல்... வீல்...
ச்சு, அழறதை நிறுத்து!


இரு! இரு! பூதத்துகிட்டே பிடிச்சுக் கொடுத் துடறேன்.
வாவ்! சூப்பர்.
குழந்தை தொடர்ந்து அழுதது.
எதுக்கு அழறே?
ம்... ம்... பூதத்துகிட்டே பிடிச்சுத் தராதே.
அடடே! சும்மாடா செல்லம். அந்த பூதம் வந்தா கட்டிப் போட்டு உதைக்கலாம்.
நீயும் உதை சரியா?
ஐயோ! நல்ல அம்மா, நல்ல புள்ளை!
இனி இந்தப் பக்கமே வரக் கூடாதுடா சாமி!

மந்திரப்பட்டி, தந்திரப்பட்டி!

மந்திரப்பட்டியும் தந்திரப்பட்டியும் அடுத்தடுத்து இருக்கும் ஊர்கள். மந்திரப்பட்டியில் நிறைய மந்திரவாதிகள் இருந்தனர். அவர்கள் தந்திரப்பட்டி மக்களுக்கு அடிக்கடி தொல்லை அளிப்பார்கள். தந்திரப்பட்டி மக்கள் தங்களது புத்திக் கூர்மையால் அவற்றைச் சமாளித்து வந்தனர்.

ஒருமுறை தந்திரப்பட்டியைச் சேர்ந்த கண்ணன், முருகன், ஈஸ்வரி, எழிலரசி நான்கு பேரும் ஆற்றங்கரையில் விளையாடிக் கொண்டிருந்தனர். ஆற்று மணலைக் குவித்து வீடு கட்டினார்கள். அப்போது அந்த வழியாக மந்திரப்பட்டியைச் சார்ந்த 'ஜடாமுடியன்' என்ற மந்திரவாதி வந்து கொண்டிருந்தான்.



இவர்களையும் மணல் வீட்டையும் பார்த்த ஜடாமுடியனுக்கு ஏதாவது வம்பு செய்ய தோன்றியது. "என்ன பசங்களா, என்ன செய்துட்டு இருக்கீங்க?" என்று கேட்டான்.

''மணல் வீடு கட்டி விளையாடிட்டு இருக்கோம்'' என்றான் கண்ணன்.

"வீடு ரொம்ப சின்னதா இருக்கே, நான் வேணும்னா பெரிசாக்கி விடவா?'' என்றவன் ஒரு மந்திரத்தை உச்சரித்தான்.

அடுத்த நொடியே அந்த மணல் வீடு மற்ற வீடுகளைப் போல்

மேஜிக் மாமா



பெரிதாகிவிட்டது. நான்கு பேரும் திகைத்து விட்டனர்.

"வாங்க பசங்களா, உள்ளே போய்



பார்ப்போம்'' என்ற ஜடாமுடியன் வீட்டுக்குள் சென்றான்.

"கண்ணா, முருகா இவர் ஏதோ சூழ்ச்சி செய்யறார். நாம உள்ளே போக வேணாம்'' என்றாள் ஈஸ்வரி.

"பயப்படாதே ஈஸ்வரி, இதெல்லாம் நமக்குப் புதுசா என்ன? வாங்க பார்த்துடலாம்" என்றான் முருகன்.

ஜடாமுடியன் திரும்பிப் பார்த்து

''ஏன் நின்னுட்டீங்க? ஏதாவது செய்துடுவேன்னு பயப்படறீங்களா? நாங்க உங்க ஊர்க்காரங்களுக்குத் தொந்தரவு கொடுக்கறது உண்மைதான். ஆனா நீங்க சின்னப் பசங்க, உங்ககிட்டே போய் வம்பு செய்வேனா? நீங்க சந்தோஷமா விளையாடத்தான் கூப்பிடறேன். பயப்படாம வாங்க'' என்றான்.

முருகன் முதலில் செல்ல, அவனைத் தொடர்ந்து மற்ற மூவரும் நுழைந்தனர். மணலாலே உருவான வீடல்லவா? சுவரில் கை வைத்ததும் மணல் 'பொல பொல' வென உதிர்ந்தது. பாதங்கள் மண்ணில் புதைந்தன. தூக்கி வைத்து நடந்தனர். குளிர்ச்சியாகவும் இருட்டாகவும் இருந்தது.

ஜடாமுடியன் ஒரு மந்திரத்தை உச்சரித்தான். வீட்டின் நடுவில் மிகப் பெரிய அகல் விளக்கு தோன்றியது அதில் எண்ணெய். யானையின் துதிக்கையைப் போல் திரி. அது எரிய ஆரம்பித்ததும் மணல் வீடு பிரகாசமானது.

"அடடா! வீட்டில் அறைகளே இல்லையே, எங்கே உங்களுக்குப் பிடித்த மாதிரி ஆளுக்கு ஓர் அறையைக் கட்டுங்கள் பார்ப்போம்"



என்றான் ஜடா முடியன்.

நால்வரும் பயம் முற்றிலும் நீங்கியவர்களாக ஆளுக்கு ஒரு பக்கமாகச் சென்று மண்ணைக் குவித்து அறையை உருவாக்க ஆரம்பித்தனர். ஒவ்வொருவரும் மனத்தில் அறையின் வடிவை நினைத்துக் கொண்டு கட்ட ஆரம்பிக்க, அது அப்படியே பெரிதாக உருவாயிற்று.

"சபாஷ்! நான்கு பேரும் நான்கு விதமான அறைகளை உருவாக்கி இருக்கிறீர்கள். இனி இந்த அறைகளுக்கும் வீட்டு வாசல்களுக்கும் நான் கதவுகளையும் ஜன்னல்களையும் பொருத்துகிறேன்'' என்ற ஜடாமுடியன் அது போலவே செய்தான்.

''இப்படி ஓர் அனுபவம் எங்களுக்குக் கிடைக்குமென எதிர்பார்க்கவே இல்லை'' என்றான் கண்ணன்.

''இதென்ன பெரிய அனுபவம்? இனிமேல் கிடைக்கப் போகும் அனுபவம்தான் மிகவும் சுவாரஸ்யமானது. நால்வரும் அவரவர் அறைகளுக்குச் செல்லுங்கள்'' என்றான் ஜடாமுடியன்.

கண்ணன், முருகன், ஈஸ்வரி, எழிலரசி நால்வரும் தத்தம் அறை வாசலில் சென்று நின்று கொண்டனர். உடனே ஜடாமுடியன் நான்கு அறை வாசல்களையும் இணைக்கும் விதமாக வட்டமாக ஒரு கோடு போட்டான். அந்தக் கோடு பெரியதாகி அங்கே பெரிய அகழி உருவானது. அதற்குள் முதலைகள் தோன்றின. நால்வரும் அதிர்ந்தனர்.



ஜடாமுடியன் சிரித்தான். "ஹா... ஹா... ஹா..! பொடிப் பசங்களா விளையாட்டு ஆரம்பமாயிடுச்சு. இதே போல ஒரு அகழியை வெளியேயும் வீட்டைச் சுத்தியும் உருவாக்கப் போறேன். நீங்க மணலைத் துளையிட்டு அந்தப் பக்கமா வெளியேயும் போக முடியாது. ஒருத்தர் அறையைத் தாண்டி இன்னொருவர் அறைக்கும் போக முடியாது" என்றான்.

''ஐயோ! கடைசியில உன் புத்தியைக் காட்டிட்டியே'' என்று சீறினாள் ஈஸ்வரி.

"எங்களைப் பத்தி நல்லா தெரிஞ்சும் தைரியமா என் பின்னாடி வந்தது உங்களோட தப்பு. போகட்டும்! நீங்க எல்லாம் ரொம்ப சின்னப் பசங்களா இருக்கீங்க. உங்களுக்காக நான் சில உதவிகளைச் செய்துட்டுப் போறேன். அதைப் பயன்படுத்தி தப்பிக்க முடியுமான்னு பாருங்க. தந்திரப்பட்டிக் காரங்கதான் பெரிய புத்திசாலிகள்னு சொல்லிக்கறீங்களே..'' என்ற ஜடாமுடியன் மந்திரத்தை உச்சரித்தான்.

கண்ணன் அருகே ஒரு மண்வெட்டி தோன்றியது. அதுபோல் முருகன் அருகில் கயிறும், ஈஸ்வரி மற்றும் எழிலரசி அருகே நீளமான மூங்கில் குச்சி மற்றும் சிறுசிறு கற்களும் தோன்றின.

"உங்கள் சாமர்த்தியத்தைப் பயன்படுத்தி இவற்றை வைத்துத் தப்பிக்கப் பாருங்கள். வருகிறேன் பொடியன்களா?'' என்ற ஜடாமுடியன், வாசல் கதவை மூடிக்கொண்டு சென்று விட்டான்.

இப்போது அந்த மணல் வீட்டில் அவர்கள் மட்டுமே இருந்தனர் நான்கு பேரும் எதிரெதிரான நான்கு அறை



வாசல்களில் நின்றிருந்தார்கள். சுற்றிலும் அகழி. மையத்தில் பெரியதாய்ச் சுடர்விடும் அகல் விளக்கு.

கண்ணன் தனது அறைக்குள் சென்று ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான். வெளியேயும் வீட்டைச் சுற்றி அகழி. அதிலும் முதலைகள்! கண்ணுக்கு எட்டிய தூரம் வரை ஆட்கள் யாரும் தென்படவில்லை.

''கண்ணா, கண்ணா'' என்று அழைத்தாள் எழிலரசி.

கண்ணன் அறை வாசலுக்குத் திரும்பினான். "என்ன?"

"இப்போது என்ன செய்வது? நான் ஆரம்பத்திலேயே எச்சரித்தேன். கேட்காமல் வந்தீர்கள். இப்போது பார்த்தீர்களா?'' என்று கோபப்பட்டாள் ஈஸ்வரி.

''பயப்படாதே ஈஸ்வரி, இந்த மாதிரி சமயத்தில்தான் பதற்றமடையக் கூடாது. எப்படித் தப்பிக்கலாம் என்று யோசிப்போம்'' என்றான் முருகன்.

வெளியே வானம் மேக மூட்டத்துடன் இருள ஆரம்பித்தது. பலமாக மழை பெய்வதற்கான அறிகுறி தோன்றியது. மழை பெய்தால் மண் வீடு கரைய ஆரம்பித்து விடும். முதலைகள் அகழியை விட்டு வெளியே வந்தால் ஆபத்தாயிற்றே என எண்ணி நடுங்கினாள் ஈஸ்வரி.



(நான்கு பேரும் மணல் வீட்டிலிருந்து தப்பினார்களா? அடுத்த இதழில்...)

1000/-ரூபாய்



பரிசுப் போட்டி முடிவு!

பிப்ரவரி இதழில் அறிவித்த பரிசுப் போட்டியில் கலந்து கொண்டு அசத்திய அனைவருக்கும் நன்றி. வழக்கம் போல் பெரும்பாலானோர் சரியான விடைகளையே எழுதியிருந்தீர்கள். ஆகவே, குலுக்கல் மூலம் ஐந்து பேரைத் தேர்வு செய்து, தலா ரூ.200/- வீதம் பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படுகிறது.

சரியான விடைகள் :

தொடர்புள்ள பொருட்கள் : பேனா - நோட்டுப் புத்தகம், கம்ப்யூட்டர் கீ போர்டு - மவுஸ், மேஜை - நாற்காலி ஹெல்மெட் - ஸ்கூட்டர்

தொடர்பில்லாத பொருட்கள் : பழங்கள் - டீ கப்

பரிசு பெறுவோர் :

1.கி.திவ்யாஜோதி, ஒன்பதாம் வகுப்பு, திருவொற்றியூர்

2. பா.ஆனந்தராஜா, ஒன்பதாம் வகுப்பு, கோட்டுச்சேரி


3.எஸ்.சுப்புலட்சுமி, பத்தாம் வகுப்பு, நாகர்கோவில்

4.சி.ஸ்ருதி, ஐந்தாம் வகுப்பு, கோவை

5.கோ.பிரவீண்குமார், ஐந்தாம் வகுப்பு, விழுப்புரம்

டென்ஷனுக்கு குட் பை! கோகுலத்துக்கு ஹாய்!

ஹாலிடே சந்தா சிறப்புச் சலுகை



ஒரு வருடம்	இரண்டு வருடங்கள்	மூன்று வருடங்கள்
96/-	~~192/-~~ 172/-	~~288/-~~ 250/-


'நம்ம அபிமான கோகுலம் எப்போ கடைக்கும் வரும்? நாம் போய் வாங்குவதற்குள் தீர்ந்து விடுமோ' என்று ஒவ்வொரு மாதமும் டென்ஷனுடன் இருக்கீங்களா? வீட்டில் இருந்தபடியே, கோகுலம் வேணுமா? உங்களைத் தேடி வரும் கோகுலத்துக்கு ஹாய் சொல்லுங்க. சந்தா கட்டுங்க. பணத்தையும் மிச்சப் படுத்துங்க. இப்ப இரண்டு வருடங்களுக்கான சந்தா ரூ.172/- மூன்று வருடங்களுக்கு ரூ.250/- மட்டுமே!

இந்தச் சலுகை 30.6.2007 வரையே!

சந்தாத் தொகையை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு DD அல்லது மணியார்டராக அனுப்புங்க. உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்), கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை-600 032.



"ஹலோ ஆண்ட்டி! என்ன... வடாம் போட்டுட்டு இருக்கீங்களா?"

"ஆமா பசங்களா! உங்களுக்குப் பரீட்சை முடிஞ்சதா?"

"ஓ! இனி ரெண்டு மாசத்துக்கு ஜாலிதான். புதுசா புத்தகங்கள் வாங்கியிருந்தா கொடுங்க ஆண்ட்டி. படிச்சுட்டுத் தரோம்."

"கண்டிப்பா கொடுக்கறேன் விஜி. போன மாசம் நீங்க எல்லாம் பரீட்சைக்குத் தீவிரமாப் படிச்சுட்டிருந்த சமயம் ஒரு நூல் வெளியீட்டு விழாவுக்குப் போயிருந்தேன். குழந்தைகளுக்காக அறுநூறுக்கும் மேற்பட்ட புத்தகங்களை வெளியிட்டு இருக்கிற பழனியப்பா பிரதர்ஸ் நடத்திய விழா."

"கேள்விப்பட்டேன், ஆண்ட்டி! மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரமும் அவரது பேத்தி அதிதி நளினி சிதம்பரமும் கலந்துகிட்ட விழாதானே?"

"கரெக்ட் பாபு! அதிதி உங்களை மாதிரி குட்டீஸ்தான். பட்டுச்சட்டை பாவாடையில் பல பெரியவர்களுடன் மேடையில் ஜோரா உட்கார்ந்துட்டு இருந்தா. விழாவுக்கும் நிறையப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அழைச்சுட்டு வந்திருந்தாங்க. 'கவிஞர் செல்ல கணபதியின்' மணக்கும் பூக்கள் என்கிற கவிதைத் தொகுப்பு, 'அம்மா! அம்மா!' 'சின்னச் சின்னப் பாட்டு' என்கிற ஒலித்தகடுகள் வெளியிடப்பட்டன. செல்ல கணபதி அழ.வள்ளியப்பாவின் பிரதான சீடர். குழந்தைப் புத்தகங்களை வெளியிடும்போது அதை ஒரு குழந்தைதான் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று வள்ளியப்பா அடிக்கடி சொல்வாராம். அதனால்தான் அதிதி பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்தார்."

"அப்பாகிட்டே





மணக்கும் பூக்கள்!

சொல்லி நாங்களும் வாங்கறோம், ஆண்ட்டி."

மணக்கும் பூக்கள் புத்தகம், அம்மா! அம்மா!, சின்னச் சின்னப் பாட்டு ஒலித் தகடுகள் கிடைக்குமிடம் : பழனியப்பா பிரதர்ஸ், கோனார் மாளிகை, 25, பீட்டர்ஸ் சாலை, சென்னை - 600 014.

ஒற்றர் இந்திரா!

★ இந்திரா காந்தியின் இயற்பெயர் இந்திரா பிரியதர்ஷினி.

★ செல்வம் நிறைந்த செல்வாக்கு மிக்க குடும்பத்தில் பிறந்த ஒற்றைக் குழந்தை இந்திரா. ஆனால் பல சோதனைகளை குழந்தைப் பருவத்திலேயே சந்திக்க நேர்ந்தது. அப்போது சுதந்திரப் போராட்டம் தீவிரமடைந்து



கொண்டிருந்த காலகட்டம். தாத்தா மோதிலால் நேருவும் அப்பா ஜவாஹர்லால் நேருவும் தங்கள் பெரும்பாலான நேரத்தை சிறையிலேயே கழிக்கவேண்டி வந்தது. போதாக் குறைக்கு அம்மா கமலா நேருவையும் ஒருமுறை காவல் துறையினர் சிறைக்கு அனுப்பிவிட, குழந்தை இந்திரா ஒருவித பாதுகாப்பற்ற மனநிலைக்கு உள்ளானார்.

★ ஒரு முறை சுதேசிப் பொருள்களுக்கு ஆதரவாகவும், வெளிநாட்டுப் பொருள்களுக்கு எதிராகவும் ஒரு போராட்டம் நடந்தது. வெளிநாட்டுத் துணிகளை அங்கிருந்த பெரும் தீக் குண்டத்தில் வீசியெறிந்தார்கள் சுதந்திரப் போராட்ட வீரர்கள். இதைப் பார்த்துக் கொண்டிருந்த நான்கு வயது இந்திரா வேகமாக நடந்து சென்று, தன் கையில் இருந்த ஒரு பொம்மையை அந்தத் தீயில் தூக்கி யெறிந்தாராம். அத்தனை பேரும் அசந்துவிட்டார்கள். அது இங்கிலாந்திலிருந்து இறக்குமதியான பொம்மை!

★ இந்திரா காந்தி பெரிய அளவில் விளையாட்டுகளில் ஈடுபட்டதில்லை. என்றாலும் தனது பதினொன்றாம் வயதில், தன் சினேகிதிகளுடன் "வானரப் படை" ஒன்றை ராமாயண ஸ்டைலில் உருவாக்கி, அதைக் கொண்டு அந்தப் பகுதியில் உள்ள காவல் துறையினரின் நட



வடிக்கைகளைக்கூட ஒற்றறிந்து வந்து வீட்டில் உள்ளவர்களிடம் கூறியதுண்டாம்!

★ ஜவாஹரின் மகளாகப் பிறந்ததால் பல சரித்திர புருஷர்களின் நெருக்கம் இளம் வயதிலேயே

ஜி.எஸ்.எஸ்.



இந்திராவுக்குக் கிடைத்தது. பூனாவில் ஒரு பள்ளியில் படித்தபோது, சிறையில் இருந்த காந்திஜியை அடிக்கடி சந்தித்துப் பேசிவிட்டுத் திரும்பியிருக்கிறார் இந்திரா. ரவீந்திரநாத் தாகூரிடம் சில காலம் படித்திருக்கிறார்.

★ ஹானர்ஸ் கல்வி பயில்வதற்காக ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக் கழகத்துக்கு 1937-ல் அனுப்பப்பட்டார் இந்திரா. அவரால் அந்தக் கல்வியைப் பூர்த்தி செய்யமுடியவில்லை. அதற்கு முக்கிய காரணம் பிரிட்டனில் இரண்டாம் உலகப் போர் தொடங்கியிருந்தது.

★ 1942-ல் ஃபெரோஸ்-இந்திரா திருமணம் நடைபெற்றது. தனது திருமணத்தின்போது இந்திரா அணிந்திருந்தது ஒரு கதர்ப் புடைவைதான்! அந்தப் புடைவையை இந்திரா காந்தி அணிந்ததற்கு ஒரு தனிக்காரணம் இருந்தது. நேரு சிறையிலிருந்தபோது அவரே நூற்ற நூலினால் நெய்யப்பட்ட புடைவை அது. ஃபெரோஸ் காந்தியும் கதர் ஷெர்வானிதான் அணிந்திருந்தார்.

★ ஜவாஹர்லால் நேரு நாட்டின் முதல் பிரதமரானார். வீட்டை நிர்வகிக்க பொறுப்புள்ள ஒரு பெண்மணி அவருக்குத் தேவைப்பட்டார். ஆனால் மனைவி கமலாவோ உயிரோடு இல்லை. இந்திரா காந்தி தந்தைக்கு உதவியாக அரசு விழாக்களின் ஏற்பாடுகளுக்குப் பின்னணியில் இருந்தார்.

★ பின்னர் இந்திரா காந்தி நாட்டின் பிரதமரானபோது பாகிஸ்தானுடன் நடைபெற்ற போரில் இந்தியா வென்றது. பங்களாதேஷ் இந்தியாவின் உதவியுடன் தனி நாடாகப் பிரிந்ததும் இந்திரா காந்தியின் ஆட்சியின்போதுதான்.

★ இந்திரா காந்தி சந்தேகமில்லாமல் அப்பா செல்லம்தான். என்றாலும் அரசியல் விஷயங்களில் தனக்குத் தோன்றிய எதிர் கருத்துகளை நேருவிடம் கூற அவர் தயங்கியதில்லை. சிறையிலிருந்து மகளுக்கு ஜவாஹர்லால் நேரு எழுதிய கடிதத் தொகுப்பு உலகப் புகழ் பெற்றுவிட்டது.

★ 1984ஆம் ஆண்டு, அக்டோபர் 31ஆம் தேதி தம் வீட்டின் தோட்டத்தில் நடந்து கொண்டிருந்தபோது, அவரது பாதுகாவலர்களில் இருவராலேயே சுடப்பட்டு மரணமடைந்தார் இந்திரா.




திருச்சி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி வித்யாலயா பள்ளியில் சுபாஷிணி படிப்பது நான்காம் வகுப்பு. ஓவியம் வரைவதில் அரசி! படிப்பிலும் கெட்டி. திருச்சிராப்பள்ளி மாவட்ட அளவில் நடந்த ஓவியப் போட்டியில் கலந்து கொண்டு இரண்டாவது பரிசைப் பெற்றுள்ளார்.





ஓவிய அரசி!





எழுத்து நாயகி!

வடக்கன்குளம் பாலகிருஷ்ணா மெட்ரிக் பள்ளியில் ஆறாம் வகுப்பு படிப்பவர் மனிஷா. சமீபத்தில் மாநில அளவில் பல பள்ளிகளுக்கிடையே நடந்த கையெழுத்துப் போட்டியில் பங்கு பெற்று ஆறுதல் பரிசைத் தட்டிச் சென்றுள்ளார். பரத நாட்டியத்திலும் மனிஷா நாயகி தான். திருநெல்வேலி மாவட்ட அளவில் நடந்த போட்டியில் இரண்டாவது பரிசு பெற்றுள்ளார். இவரது சாதனை வளரட்டும்!





விழுப்புரத்திலுள்ள ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி வித்யாலயா மெட்ரிக் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படிக்கும் கோ.பிரவீன்குமார் ஓட்டப் பந்தயத்தில் ஓட ஆரம்பித்தால் மின்னல் வேகம்தான்! ஏழாவது வயதில், மாவட்ட அளவில் நடந்த ஓட்டப் பந்தயப் போட்டியில் இரண்டாவது பரிசும் அடுத்த ஆண்டே முதல் பரிசும் பெற்று அசத்தியுள்ளார். அவரைப் பாராட்டி 'யுவ கலாபாரதி' என்ற விருது வழங்கப்பட்டுள்ளது. கோகுலம் வாசகர்கள் சார்பாக நாமும் அவரைப் பாராட்டுவோம்!


பாரதி யுவ கேந்திரா
"யுவகலா பாரதி" விருது
"யுவ கலா பாரதி"
பிரம்மச்சாரி அனிருத் சைதன்யா



ரன்னர், வின்னர்!

பெரிய நகரம் முதல் குக்கிராமம் வரையிலுள்ள இளம் சாதனையாளர்களை வெளிச்சமிட்டுக் காட்டும் பகுதியிது. விளையாட்டு, பேச்சு, ஓவியம் என எதுவாக இருந்தாலும் சரி, அவற்றில் மாவட்ட அளவிலோ, மாநில அளவிலோ கலந்துகொண்டு பரிசு பெற்றிருந்தால் அது குறித்த விவரங்கள், புகைப்படம், சான்றிதழின் நகல் ஆகியவற்றை அனுப்புங்கள். சிறந்தவை வெளியாகும். கோகுலம் சார்பாகவும் அவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசு அளிக்கப்படும். மறக்காமல் பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாக குறிப்பிட வேண்டும். முக்கியமான நிபந்தனை, அந்தச் சாதனை கடந்த ஓராண்டுக்குள் நிகழ்த்தப்பட்டதாக இருக்க வேண்டும். பழையது வேண்டாம்.



அனுப்ப வேண்டிய முகவரி :
கோகுலம், சாதனை தளிர்கள், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 032.



ஆற்றங் கரையின் ஓரத்தில்
அழகிய குருகுல பீடத்தில்
அமைதி யாக அமர்ந்திருந்தார்
அன்பு ததும்ப ஒரு துறவி!

அவரைப் பணிந்து ஓர் சிறுவன்
'அய்யா எல்லாம் எனக்கெதிராய்
ஒன்று திரண்டு நடக்கிறது!
எதுவும் பிடிக்கலை என்றிட்டான்!

அவனைப் பார்த்துச் சிரித்துவிட்டு,

உப்பும்



வளர்கவி



'களைத்துக் காணப் படுகின்றாய்!
கண்ணா! கொஞ்சம் நீர்பருகு!'
என்று கமண்டல நீர்தந்தார்!

பருகப் போன வேளையிலோ,
பைய ஒருகை உப்பெடுத்து
தந்த நீரில் கரையவிட்டு
'தம்பி, இப்போக் குடி!'யென்றார்.

ஒருவாய் குடித்த அச்சிறுவன்
'ஊஹூம்' என்று தலையசைத்தே

நீரும்!

உமிழ்ந்தான் குடித்த தண்ணீரை!
'உப்புக் கரிக்குதே!' என்றிட்டான்!

''ஆகா! அப்படி என்றால்நீ
ஆற்று நீரை அள்ளிக்குடி!''
என்று சொல்லிக் குடிக்கும்முன்
அதிலும் ஒருகை உப்பிட்டார்!

சிறிய புன்னகை தவழவிட்டு,
சிறுவன் தன்னை அருகழைத்து,
'இப்போ கரிக்குதோ?'
எனக்கேட்டார்?
'இல்லை!' என்றான் அச்சிறுவன்

''தம்பி உனக்கு எதிராக
உள்ளது ஒருகை உப்பளவே!
உள்ளம் கமண்டலம் போற்சிறுத்தால்
உப்புக் கரிக்கும் உண்மையிது.

உள்ளம் அகண்டவர் ஒருநாளும்
உழன்ற தில்லை துன்பத்தால்!''
என்று இதமாய் நற்குணத்தை
எடுத்துச் சொல்லிக் கரைசேர்த்தார்!





சூப்பர் கையெழுத்து!

நல்லதோர் வீணை

நல்லதோர் வீணைசெய்தே – அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?
சொல்லடி, சிவசக்தி! – எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்,
வல்லமை தாராயோ, இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே?
சொல்லடி, சிவசக்தி! – நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ?
விசையுறு பந்தினைப்போல் – உள்ளம்
வேண்டியபடி செலும் உடல்கேட்டேன்
நசையறு மனங்கேட்டேன் – நித்தம்
நவமெனச் சுடர்தரும் உயிர்கேட்டேன்,
தசையினைத் தீசுடினும் – சிவ
சக்தியைப் பாடும்நல் அகங்கேட்டேன்,
அசைவறு மதிகேட்டேன், இவை
அருள்வதில் உனக்கேதும் தடையுளதோ?

பாரதியார்.



க. இளையநிலா
மூன்றாம் வகுப்பு,
தூய இருதய மேரி பெண்கள்
மேல்நிலைப்பள்ளி, புதுச்சேரி.

ஆல்பிரட் பெர்னார்டு நோபல்

சுவீடன் நாட்டில் 21-10-1833ல் பிறந்த ஆல்பிரட் பெர்னார்டு நோபல் என்பவரது பெயரால் தொடங்கப்பட்ட விருதுதான், உலகின் தலைசிறந்த விருதுகளில் ஒன்றான நோபல் பரிசு. இவர் தன் அதிக உழைப்பால் உயர்ந்தவர். நோபல் பரிசு தோன்றிய விதம் சுவாரசியமானது. ஆல்பிரட் நோபல் டைனமைட்டை கண்டுபிடித்தார். தனது கண்டுபிடிப்பான டைனமைட்டை கொண்டு பல உயிர்கள் அழிக்கப்படுவதை கேட்டு வருந்தியும், தான் ஒரு பயன்படாத பொருளின் கண்டுபிடிப்பாளராக அடையாளம் காணப்படக்கூடாது என்று கருதி தனது பெயரில் ஒரு விருதினை ஏற்படுத்தி அதனை உலகில் சிறந்த சாதனையாளர்களுக்கு கொடுக்க வேண்டும் என உயில் எழுதினார்.



கே. கிருத்திஷ்
எட்டாம் வகுப்பு,
புனித சிலுவை
மேல்நிலைப்பள்ளி,
சேலம்.

அப்துல் கலாம்

ராமேசுவரம் கடற்கரையில் வானத்தில் பறக்கும் பறவைகளைப் பார்த்த சிறுவயதாக இருந்த அப்துல் கலாம் அவர்கள், "நானும் ஒரு நாள் இப்படிப் பறந்து செல்வேனா? என்று கனவு கண்டார். அப்துல்கலாம் வளர்ந்த பிறகு அவ்வாறே விண்வெளி பற்றிய ஆராய்ச்சியில் வெற்றி பெற்றார். விஞ்ஞானி ஆனார். பிறகு குடியரசு தலைவர் ஆனார். அவரின் பொன்மொழி "கனவு காண்க, எண்ணங்கள் மலரும், செயல்கள் காண்பீர்"



எச். விபா
நான்காம் வகுப்பு,
ஜவஹர் வித்யாலயா
சீனியர் செகண்டரி பள்ளி,
சென்னை.

சிறுகதை



சுந்தரம் பருப்பு வியாபாரி. துவரம் பருப்பு, உளுத்தம் பருப்புகளைப் பட்டணத்திலிருந்து மொத்த விலைக்கு வாங்கி உள்ளூரில் விற்பான். முதலில் நியாயமான முறையில் வியாபாரம் செய்த சுந்தரம், விரைவில் பணக்காரனாகிவிட வேண்டும் என நினைத்தான். அதனால் ஒரு பங்கு முதல்தரமான பருப்புகளோடு தரம் குறைந்த பருப்புகளைக் கலந்து அதிக விலைக்கு விற்கத் தொடங்கினான்.

சுந்தரத்தின் அம்மாவுக்கும் மனைவிக்கும் இது பிடிக்கவில்லை. "இப்படிக் கிடைக்கிற லாபம் ரொம்ப நாள் நிக்காதுங்க. சொன்னா கேளுங்க" என்பாள் மனைவி.



மாறியது மனம்!

ஆ. விஜயலக்ஷ்மி

''இந்தக் காலத்தில் இப்படி இருந்தால்தான் பிழைக்க முடியும். சீக்கரம் முன்னேற முடியும்'' என்பான் சுந்தரம்.

"இப்படி வியாபாரம் செய்யறதும் முகமூடி போட்டுக்கிட்டுக் கொள்ளையடிக்கறதும் ஒண்ணுதான்" என்பாள் அவன் அம்மா. அவன் எதையும் காதில் வாங்க மாட்டான். தொடர்ந்து தனது இஷ்டப்படியேதான் வியாபாரம் செய்தான்.

தீபாவளி நெருங்கி வந்தது. பருப்பு வகைகள் அதிகம் விற்பனையாகும் என்றறிந்த சுந்தரம், மூட்டைக் கணக்கில் விதவிதமான பருப்பு வகைகளை வாங்கி வழக்கம்போல அவற்றைக் கலப்படம் செய்து விற்றான். நல்ல இலாபம்!

தீபாவளிக்கு இன்னும் இரண்டு நாட்களே இருந்தன. பொருள்கள் இருப்பைக் கணக்குப் பார்த்தான். இன்னும் ஒரு நாளுக்குத் தேவையான பருப்பு மட்டுமே இருந்தது.

வழக்கம்போல் சைக்கிளில் மூட்டையை ஏற்றினான். தன் மனைவியிடம், "இருக்கிற பருப்பையெல்லாம் வித்துட்டு, டவுனுக்குப் போய் இன்னைக்குக் கொள்முதல் பண்ணணும். அதனால வீட்டுக்கு வர நடுராத்திரியாகிடும்" என்றான்.

"பத்து நாளா பயங்கர அலைச்சல்! தீபாவளிக்கு இன்னும் ரெண்டு நாள்தான் இருக்கு. ஒய்வு எடுத்துட்டு அப்புறமா வியாபாரத்தை ஆரம்பிக்க வேண்டியதுதானே! மழையும் விட்டு விட்டு வந்துகிட்டே இருக்கே!''





சுழல் கோப்பை!

கோகுலம் இதழில் ஓராண்டில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ அந்தப் பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கி வருகிறோம். இந்த ஆண்டு உங்கள் பள்ளிக்குச் சுழல் கோப்பை கிடைக்க, படைப்புகளை உடனே அனுப்பி வையுங்கள். உங்கள் நண்பர்களையும் எழுதச் சொல்லுங்கள்.

என்றான்.

"நீ வேற! பத்து நாள்ல பார்த்த இலாபத்தை இந்த இரண்டு நாள்ல பார்க்கணும்னு நெனைக்கிறேன்" என்றான் சுந்தரம்.

அலைந்து திரிந்து இருந்ததையெல்லாம் விற்றுவிட்டு, டவுனுக்குச் சென்று நிறைய பொருள்களை வாங்கிக் கொண்டு சைக்கிளில் காட்டுப்பாதை வழியே திரும்பிக் கொண்டிருந்தான். பொருட்கள் வாங்கியது போக, மீதிப் பணத்தைப் பாலித்தின் பையில் முடிந்து, இடுப்பிலும் சட்டைப் பைகளிலும் ஆங்காங்கே வைத்திருந்தான்.

ஊரை நெருங்கிய சமயம், புதர் மறைவிலிருந்து திடீரென இரண்டு பேர் பாய்ந்து வந்தார்கள். அவர்களிடம் கத்தி இருந்தது. சுந்தரம் நடுங்கிவிட்டான்.

"அடேய் நில்!" என்று ஒருவன் அதட்டி சைக்கிளைப் பிடித்துக் கொண்டான்.

"மரியாதையாக உன்னிடமுள்ள பணத்தை எல்லாம் எடு" என்றான் அடுத்தவன்.

"எ... என்னை எதுவும் செய்து விடாதீர்கள்!" என்ற சுந்தரம் பணத்தை எடுத்துக் கொடுத்தான்.

ஆனாலும் ஒரு திருடன் சுந்தரம் வேறு எங்காவது பணத்தை வைத்திருக்கிறானா என்ற சந்தேகத்துடன் சோதனையிட்டுப் பார்த்தான்.

"எல்லாம் கொடுத்துவிட்டேன். என்னை விட்டு விடுங்கள்" என்ற சுந்தரம் சைக்கிளில் ஏறினான்.

"எங்கே சைக்கிளில் ஏறுகிறாய்? அதையும் விட்டுவிட்டு ஓடு" என்றான் ஒருவன்.

"ஐயோ! இதில்தான் ஊர் ஊராகச் சென்று வியாபாரம் செய்து பிழைக்கிறேன். முதலுக்கே மோசமானால் எப்படிப் பிழைப்பது?" என்று பதறினான் சுந்தரம்.

"உனக்கு சைக்கிள் முக்கியமா, உயிர் முக்கியமா? நீயே முடிவு செய்து கொள்" என்று உறுமினான் அடுத்தவன்.

வேறு வழியின்றி சுந்தரம் விலகி நின்றான். அவர்கள் சைக்கிளில் ஏறி போயே போய் விட்டார்கள்.

'கலப்படம் செய்து, மக்களை ஏமாற்றிச் சேர்த்த பணம் பறிபோனதற்கே நம் மனம் இப்படி துடிக்கிறதே, நியாயமாகச் சம்பாதித்த மக்கள் நம்மிடம் வாங்கிய பொருள் கலப்படம் என்பது தெரிந்தால் எப்படித் துடிப்பார்கள்? இனி நியாயமான முறையில் சம்பாதிக்க வேண்டும்' என்று முடிவு செய்த சுந்தரம், ஊரை நோக்கி நடக்க ஆரம்பித்தான். ●

மனிதன் ஆதி நாட்களில் தனியாகவே அலைந்து திரிந்தான். பின் காடுகளிலும் நிலப் பகுதிகளிலும் கூட்டம், கூட்டமாக வாழ்ந்தான்.



* ஏதன்ஸ் ஒலிம்பிக்

பாதுகாப்புக்காக, உறைவிடங்களை நீர்நிலைகளின் கரையோரங்களில் அமைத்துக் கொண்டனர். இதுவே காலப் போக்கில் நாகரிகமாக வளர்ந்தது. கிரீஸ் / கிரேக்க கலாசாரமும், நாகரிகமும் பரிணமித்தது அவ்வாறுதான்.

'பழங்கால கிரீஸ்' என்னும் கிரேக்கம். எகிப்தைவிட கடினமான பூமி. கிரீஸில் நிறைய மணல். போதுமான நீர் வசதியும் கிடையாது. குன்றுகளும், காடுகளும் ஊடுருவிய கடற்கரையில், மனிதன் தங்கி வாழ்ந்ததாகத் தடயவியல் சொல்லுகிறது. கி.மு.3000லிருந்து, அம்மக்களிடையே கூட்டு வாழ்க்கையும் கலாசார உருவாக்கமும் இருந்ததாகத் தெரிய வருகிறது. கிரேக்க காலத்தின் துவக்கம், முடிவு என எதுவும் துல்லியமாக வரையறுக்கப்படவில்லை. பொதுவாக ரோம சாம்ராஜ்யத்துக்கு முன்புதான் கிரேக்க நாகரிகம் வளர்ந்ததாகக் கருதப்படுகிறது. ஐரோப்பாவில் நீண்ட தொடர் சரித்திரம் உடையது கிரேக்க நாகரிகம் மட்டுமே!

நிறைய நாகரிக / கலா சாரங்களின் தாய் வீடாகவும், கருவறையாகவும் 'கிரேக்க நாகரிகம்' காணப்படுகிறது.

* பார்த்தீனன் கோயில்



ஐரோப்பாவில், மத்திய தரைக் கடலுக்கு வடக்கேயும், சைப்ரஸ், ஏஜியன் கடற்கரை, துருக்கி, சிசிலி, தெற்கு இத்தாலி போன்ற இடங்களும்' அன்றைய கிரேக்கம் என்று அழைக்கப்பட்டன. இதன் எல்லைகளாக தெற்கே மத்திய






■ பெண் கடவுள் ஏதனா

தரைக்கடலும், கிழக்கே ஏஜியன் கடலும், மேற்கே அலோனியன் கடலும், வடக்கே பல்கேரியாவும் இருந்தன. இன்றைக்கு நாம் அறிவியலில் பயன்படுத்தும் பெரும்பாலான பெயர்கள் கிரேக்கத்திலிருந்து உதித்தவைதான்.

கிரேக்கம் என்றதும், அனைவரின் நெஞ்சிலும், நினைவிலும் எழுவது... 'ஏதன்ஸ்' நகரமும், அதன் 'அக்ரோலிபோஸ்' மலையுச்சியில், வெள்ளை வெளேரெனப் பளிச்சிட்டு மிளிரும் 'பார்த்தினன்' என அழைக்கப்படும் கோயில்

கிரேக்கம் தந்த கொடை!






■ சாக்ரடீஸ்...

கட்டடமும்தான்! கிரேக்கத்தில் ஏதன்ஸ், கோரின்த், டெல்ஃபி, ஸ்பார்ட்டா என முக்கியமான நகரங்களும், சுமார் 50 குட்டி நகரங்களும் காணப்பட்டன. 'ஏதன்ஸ்' நகரத்தை மக்கள் 'ஏதனை' எனச் செல்லமாக அழைத்ததுடன் 'ஏதனா' என்ற 'பெண்கடவுள்' அந்நகரைக் காப்பதாகவும் நம்பி வந்தனர்.


கிரேக்கர்களுக்கு அறிவியலில் மிகுந்த ஈடுபாடு இருந்தது. பூமியின் அமைவைப் பற்றிய குழப்பத்திலிருந்து உலகை விடுவித்துத் தீர்வு காண்பது பற்றி நிறைய சிந்தித்தனர். உலகம் நிலம், நீர், காற்று, வானம் என்ற பொருட்களால் ஆனது என்றும், மனித வாழ்க்கை, உடற்கூறு போன்றவற்றுக்கும் இவையே காரணம் என்றும் நம்பினர். கடல், தீ, சூரியன் போன்றவற்றில் 'ஆற்றல்' இருக்கிறது என்றனர். கி.மு. 600களிலேயே வானவியலை பற்றிய வரைவு செய்தனர். கி.மு. 400களில் வாழ்ந்த 'பித்தாகரஸ்' என்ற தத்துவ/கணித மேதை கணிதத்திலும், இசையிலும் ஆர்வம் பெற்று, கணிதச் சூத்திரத் தீர்வுகள் அமைத்தார். அவரிடம் மட்டுமே, பெண்கள் மாணவிகளாக இருந்தனர். அதுமட்டுமல்ல, பித்தாகரஸின் சூத்திரங்களை, அவரது மாணவிகளும், மனைவியுமே உருவாக்கி எழுதியதாக சரித்திர சாட்சியங்கள் சொல்கின்றன. தத்துவமேதையான சாக்ரடீஸ், பிளாட்டோ போன்றவர்களும் தங்களின் கருத்தை விதைத்தது கி.மு. 300களில்தான். மருத்துவ மேதையான அரிஸ்டாட்டில், தாவர, விலங்குகள் பற்றிய முதல் புத்தகங்களையும், 'ஹிப்போகிரட்டிஸ்' மருத்துவ புத்தகங்களையும் எழுதினர். சூரிய கிரகணத்தையும் முதன் முதலில் கண்டறிந்து உலகுக்கு அறிவித்தனர். இன்றும்கூட, மருத்துவர்கள், ஹிப்போகிரட்டிஸ் பெயராலேயே 'சத்தியபிரமாணம்' எடுத்துக் கொள்கின்றனர்.




கிரேக்கர்கள், வாழ்வியலுக்கு ஆதாரமான உடலைக் கவனிப்பதில் மிக்க அக்கறை உடையவர்கள் அதற்காகவே உடலுக்கு வலுவூட்டும் விளையாட்டுகளை அக்கறையுடன் போட்டியாக நடத்தினர் அதனை முன்னிட்டு உடற்பயிற்சிக் கூடங்களை, அனைத்து நகரங்களிலும் உருவாக்கினர். கடவுள் உரு

வங்களைக் கூட, மனித உடம்பு வடிவில், அழகான, பலமான, சரியான அளவுடன் கூடியனவாக, வடிவமைத்தனர். உடலை பலமாகவும், அழகாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்க நல்ல உணவு, நல்ல உடற்பயிற்சியுடன், தினந்தோறும் உடலுக்கு எண்ணெய் 'மசாஜ்' செய்து மெருகூட்டினர். அனைத்து விஷயங்களையும் போட்டி மனப்பான்மையுடன் செயல்படுத்தினர். இதில் மிக மிக முக்கியமானது 'ஒலிம்பிக்' விளையாட்டு போட்டிகள். ஒலிம்பிக்கை முதன்முதலில் உலகுக்கு அளித்தவர்கள் கிரேக்கர்களே!

■ அன்றைய ஏதன்ஸ் நகரம்





கிரேக்கர்களின் கவனம் அதிகமாக ஆடைகளில் இருந்தாலும் குழந்தைகட்கு அவர்கள் எந்த உடையும் அணிவிக்கவில்லை! அரிதாக, நாம் பயன்படுத்தும் 'டயபர்' போல, இடுப்பில் ஒரு துணி கட்டினர். பண்டிகைக் காலங்களில் உடம்பை மூடி ஒரு துணி அணிவித்தனர். ஆண்கள், நம்மூர் 'பெண் குழந்தைகள் 'மிடி' போடுவது போல, முழங்கால் வரையிலான ஒரு நீண்ட அங்கி, சுருக்கத்துடன் அணிந்திருந்தனர். தோளில் ஒரு பக்கமாய் நீளமாக ஒரு துண்டு போட்டிருந்தனர். பெரும்பாலோர் வெறுங் காலுடன் நடந்தனர். மிகக் குறைவான பேர், சந்தன மணம் உள்ள தோல் செருப்பு அணிந்தனர். பெண்கள், ஒரு பெரிய துணியை நிறைய மடிப்புகளாக அமைத்து, உடல் முழுவதும் போர்த்தியிருந்தனர்.

கிரேக்கர்கள் மத நம்பிக்கை உடையவர்கள். கடவுளைப் பற்றிய பலப்பல புராணக் கதைகள் வழக்கத்தில் இருந்தன. 'அப்பல்லோ' என்ற ஆண் கடவுளையும், அவரது மனைவியான 'ஆர்ட்டிமிஸ்' என்ற பெண் கடவுளையும், 'ஜீயஸ்' என்ற குழந்தையையும் வழிபட்டனர். இதைத் தவிர ஏகப்பட்ட கடவுள்கள், குட்டி தேவதைகள் வழிபாடு உண்டு. பறக்கும் குதிரை, ஏழு குதிரைகள் பூட்டிய சூரியன் என்று ஏராளமான கடவுளர் இருந்தனர். ●

என் பெயர் தென்றல்!

ஆனந்தி தென்றலாகவும், தென்றல் ஆனந்தியாகவும் மாறியிருந்தார்கள். இரண்டு பேருக்கும் மனத்துக்குள் திக்! திக்! 'தாத்தா கண்டுபிடித்து விடுவாரா? ஒருவேளை கண்டுபிடித்து விட்டால்... ஒட்டுமொத்த திட்டமும் அதோ கதிதான். பார்ப்போம்!

வழக்கம்போல் வாசலுக்கு வெளியே கயிற்றுக் கட்டிலைப் போட்டு அதில் காலை நீட்டிப் படுத்துக்கொண்டிருந்தார் தாத்தா.

"தாத்தா!"

தென்றலாக மாறியிருந்த ஆனந்தி சத்தம் போட்டுக் கத்திக்கொண்டே தாத்தாவை நெருங்கினாள்.

''வாம்மா, நல்லா ஊர் சுத்தினீங்களா?'' என்றபடி தலையைச் சாய்த்துத் திரும்பிய தாத்தா, ஆனந்தியை உற்றுப் பார்த்தார்.

ஆனந்திக்கு வியர்த்தது. 'இவர் ஏன் என்னை இப்படிப் பார்க்கிறார்? சந்தேகம் வந்துவிட்டதோ?'

ஒரே ஒரு கணம்தான் பார்த்தார். பிறகு, புன்னகை செய்தார்.

''இங்கே வா, தென்றல். ஏன் அங்கேயே நிக்கறே? ஆனந்திக்குக் காட்டைச் சுத்தி காமிச்சியா?''

"ஓ. நானும் ஆனந்தியும் சேர்ந்து சுத்தினோம், தாத்தா!"

தாத்தா தென்றலைத் திரும்பிப் பார்த்தார்.

''ஆனந்தி ஏன் தயங்கி நிக்கற? இங்கே வா. வந்து பக்கத்துல உட்காரு."

ஆனந்தியாக மாறியிருந்த தென்றல் கட்டிலில் சென்று உட்கார்ந்தாள்.

"இப்படி ஒரு அதிசயத்தை நான் பார்க்கணும்னு இருக்கும். ம். சரி, இரண்டு பேருக்கும் பசி வந்திருக்கும். உள்ளே போய் ஏதாவது சாப்பிடுங்க."

இருவரும் உற்சாகத்துடன் உள்ளே நுழைந்தனர்.

"ஹையா ஜாலி! தாத்தா நம்மைக் கண்டுபிடிக்கலை'' என்று கிசுகிசுத்தாள் தென்றல்.

"ஏ, என்னை உத்து உத்து பார்த்தாரு பாரு. அப்ப எனக்கு பயமாயிடுச்சு. கண்டுபிடிச்சுடுவாரோன்னு நினைச்சேன். நல்ல வேளை'' என்றாள் ஆனந்தி.

இருவரும் சாப்பிட்டு முடித்தார்கள். பிறகு வீட்டின் பின்புறம் உள்ள தோட்டத்துக்குச் சென்று அங்குள்ள அரச மரத்தின் கீழே அமர்ந்து கொண்டனர். அரச இலைகள் சலசலவென்று சத்தம் போட்டுக் கொண்டே இருந்தன. நல்ல காற்று!

ஆனந்தி தென்றலின் கையை எடுத்துத் தன் கைக்குள் வைத்துக் கொண்டாள். ''சரி, இனிமேல் நான்தான் தென்றல். இந்த வீட்டைப் பத்தியும் உன் தாத்தாவைப் பத்தியும் எனக்குச் சொல்லு. என்னென்ன செய்யணும், என்னென்ன செய்யக் கூடாதுன்னு தெளிவா சொல்லிடு."

மருதன்

6





தென்றல் சொல்ல ஆரம்பித்தாள்.

"ம். சொல்றேன், கேட்டுக்க. காலையில் நாலு மணிக்கு எழுந்திருக்கணும். அப்புறம்..."

அடுத்த நொடி ஆனந்தி அலறி விட்டாள்.

"ஐயோ, நாலு மணிக்கேவா? அது பாதி ராத்திரி ஆச்சே! நான் ஸ்கூலுக்குப் போறதுக்கே ஏழு மணிக்குத்தான் எழுந்திருப்பேன். அதுவும் அம்மா காதுகிட்ட வந்து கத்தின பிறகுதான் மெதுவா கண்ணைத் திறப்பேன். அவ்வளவு சீக்கிரம் எழுந்து என்ன செய்யறது?"

"ம்ஹூம். அந்தக் கதையெல்லாம் இங்கே ஒத்து வராது. நாலு மணின்னா நாலு மணி. சரியா எழுந்துடணும். வீட்டுக்குப் பின்னாடி இருக்கிற கோழி கத்த ஆரம்பிச்சுடும். கோழி மட்டுமா? குருவி, காக்கா, நீல மூக்கு மைனான்னு விதவிதமா நிறைய பறவைங்க கீச் கீச்சுன்னு கத்த ஆரம்பிச்சுடும். நீ நினைச்சா கூட உன்னால தூங்க முடியாது."

ஆனந்தி உற்சாகமாகி முன்னால் நகர்ந்து உட்கார்ந்தாள்.

"அப்ப சரி. நீல மூக்கு மைனாவை நான் இது வரைக்கும் பார்த்ததே யில்லை. அது சரி நாலு மணிக்கு எழுந்திருச்சு நீ என்ன செய்வே? அதைச் சொல்லு."

"வேப்பங்குச்சி வச்சு பல் தேய்ச்சிட்டு, டீ குடிச்சிட்டு சுள்ளி எடுக்க காட்டுக்குப் போய்டுவேன்!"

ஆனந்தி விழித்தாள்.

"வெயிட், வெயிட்.. டூத் பிரஷ், பேஸ்ட் கிடையாது. சரி அட்ஜஸ்ட் பண்ணிக்கறேன். ஆனா, காட்டுல போய் சுள்ளி எடுக்கணும்னு சொன்னியே, அப்படின்னா என்ன?"

"மரக் கிளைகள் இருக்கில்லே? அது காய்ஞ்சி போன பிறகு, சின்ன சின்னதா உதிர்ந்துடும். அதையெல்லாம் சேகரிச்சுக் கொண்டு வந்தா தான் அடுப்பு பத்த வைக்க முடியும். அடுப்பைப் பத்த வச்சாதான் டீ, சாப்பாடு. புரியுதா?"

"ம். புரியுது."

"அப்புறம் கீரை, பழம் சேகரிக்கணும். நாங்க சாப்பிடறதுல முக்கால்வாசி இயற்கை உணவுதான். அதுக்கெல்லாம் நீ பழகிக்கணும்."

"ம். அதுல எனக்கு எந்தக் கஷ்டமும் இருக்காதுன்னு நினைக்கிறேன்."

"இவ்வளவு பெரிய காட்டுல நாங்க மட்டும் தனியாவா இருப்போம்? இன்னும் இரண்டு மைல் நடந்துபோனா அங்க சில குடிசைங்க இருக்கு. அங்க என்னோட நண்பர்கள் இருக்காங்க."

"அப்புறம் என்ன? அவ்வளவுதான்! காலையில ஆறு, ஏழு மணிக்குள்ளே எல்லா வேலையும் முடிஞ்சிடும்.



அப்புறம் நீ என்ன வேணாலும் செய்யலாம்."

"ஆங்..., அப்பவே உன்னை கேக்கணும்னு நினைச்சேன். உனக்கு நண்பர்களே கிடையாதா? இந்தக் காட்டுல இந்த ஒரு குடிசைதான் இருக்கா?"

தென்றல் சிரித்தாள். "இவ்வளவு பெரிய காட்டுல நாங்க மட்டும் தனியாவா இருப்போம்? இன்னும் இரண்டு மைல் நடந்துபோனா அங்க சில குடிசைங்க இருக்கு. அங்க என்னோட நண்பர்கள் இருக்காங்க."

ஆனந்திக்கு இன்னும் நிறைய சந்தேகங்கள் இருந்தன. 'அருவியில் குளிக்கலாமா? தனியாகக் காட்டில் சுற்றலாமா? தாத்தாவுடன் எப்படிப் பேசவேண்டும்? என்ன பேச வேண்டும்? போரடித்தால் எதை வைத்து விளையாடுவது?'

பொறுமையாக அத்தனைக் கேள்விகளுக்கும் பதில் சொன்னாள் தென்றல்.

நேரம் செல்ல செல்ல குளிர் அதிகமானது. இருவரும் உள்ளே சென்றனர். தாத்தா வெளியிலேயே தூங்கிவிட்டிருந்தார். பாயை உதறிப் போட்டு இருவரும் படுத்துக் கொண்டனர். 'போகோ' டீ.வி.யில் தான் பார்த்த ஒரு கார்ட்டூனின் கதையைச் சொல்ல ஆரம்பித்தாள் ஆனந்தி. எப்போது தூங்கிப் போனார்கள் என்று இருவருக்கும் தெரியவில்லை.

மறுநாள். அதிகாலை நான்கு மணிக்கெல்லாம் 'டாண்' என்று எழுந்துவிட்டாள் தென்றல். ஆனந்தி அசந்து தூங்கிக் கொண்டிருந்தாள். அவளை எழுப்புவதற்குப் பாவமாக இருந்தது. 'பட்டணத்தில் இருந்து வந்திருக்கிறாள். நாளை முதல் இங்கே தாத்தாவோடு இருக்கப் போகிறாள். எப்படிச் சமாளிக்கப் போகிறாளோ தெரியவில்லை' என நினைத்தாள்.

மற்றொரு கவலையும் இருந்தது தென்றலுக்கு. ஆனந்திக்கு மட்டுமா கஷ்டம்? எனக்கும்தானே! கொஞ்சமும் பரிச்சயமில்லாத ஒரு நகரத்துக்கு, ஓர் அதி நவீன பட்டணத்துக்குப் போகப் போகிறேன். இவளுக்காவது பரவாயில்லை; தாத்தாவைச் சமாளித்துவிட்டால் போதும். ஆனால் எனக்கு? ஒரு அப்பா, ஒரு அம்மா. ஒரு குட்டி தம்பி. அப்புறம், ஆங்... அந்த நாய்க் குட்டி வேறு! இத்தனைப் பேரையும் சமாளிக்கணுமே! இன்று மதியத்துக்குள் நான் கிளம்ப வேண்டியிருக்கும். இனி எங்கள் பாதை மாறப் போகிறது.

ஆனந்தியை எழுப்பினாள் தென்றல்.

"ஆனந்தி, எந்திரி. நேரம் ஆச்சு."

ஆனந்தி முனகினாளே தவிர எழுந்திருக்கவில்லை. திரும்பப் படுத்து தூங்கத் தொடங்கினாள். நான்கைந்து முறை எழுப்பிப் பார்த்துவிட்டாள். ம்ஹூம்... எழுந்திருப்பதற்கான சுவடே இல்லை.

முதன் முறையாகத் தென்றலுக்கு அந்த பயம் வந்தது. இந்தத் திட்டம் வெற்றி பெறுமா?

(தொடரும்)



கதைகளைக் கேட்க விரும்பாத மனிதர்கள் உண்டா? அதிலும் குழந்தைகள், சிறுவர் - சிறுமிகள் என்றால்... சொல்லவே வேண்டாம். சாப்பிடும்போது, தூங்கும்போது என எல்லா சமயங்களிலும் ஆவலுடன் கேட்பார்கள். அதேபோல்தான் கதைகளைப் படிப்பதும். திரைப்படங்களைப் பார்ப்பதை விட புத்தகத்தில் கதையாகப் படிப்பதில் சுவாரஸ்யம் அதிகம்; சௌகர்யமும் அதிகம். அத்துடன் நமது கற்பனைக்கும் அங்கே நிறைய இடமுண்டு.

இப்போது மட்டுமின்றி அப்போதும் கோகுலம் கதைகளின் களஞ்சியமாக இருந்தது. பத்து வரிகளில் முடிந்து விடுகிற மின்மினிக் கதைகள், பத்துப் பக்கங்களுக்கு வருகிற நெடுங்கதை, வேடிக்கையும், மந்திரத் தந்திரங்களும் நிறைந்த அயல் தேசத்துக் கதைகள் என்று அடுக்கிக் கொண்டே போகலாம். அத்துடன் சிறுவர்களே எழுதுகிற பிருந்தாவனக் கதையரங்கம், பிரபலமான எழுத்தாளர்களின் தொடர்கதை என்று பக்கத்துக்குப் பக்கம் கதைகள் நிறைந்திருக்கும்.

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தது போல் ஒவ்வொரு மாதமும் பதினாறு பக்கங்களில் வண்ணப் படக்கதைகள் வெளியாகும். அமரர் கல்கியின் மகள் ஆனந்தி எழுத, ஓவியர் 'வினு'வின் நேர்த்தியான கைவண்ணத்தில் பார்க்கவே பரவசமாக இருக்கும்.

அது மட்டுமா? அந்தப் பதினாறு பக்கங்கள் சாதாரணத் தாள்களிலிருந்து வேறுபட்டு கெட்டியான தாள்களில் அச்சாகி, நடுப் பக்கங்களாக (33 முதல் 45 வரை) வெளியாகும். அன்றையக் குழந்தைகள் அவற்றை அப்படியே கிழித்துத் தொகுத்து வைப்பார்கள்.

• ஆனந்தி



வில் விஜயன், பாக்கியவான் போளாஜி, போஜராஜனின் வரலாற்றைச் சொல்லும் 'கனகமணி சிம்மாசனம்' என்று பல்வேறு சரித்திர, புராணக் கதைகளை எளிமையாகவும் சுவையாகவும் அளித்திருப்பார் ஆனந்தி. இப்போது படித்தாலும் அதன் விறுவிறுப்பு குறையாமலிருக்கிறது.

அன்று தொடங்கி இன்று வரை நம் கோகுலத்துக்குத் தொடர்ந்து

பிரவீன்

எழுதிக் கொண்டிருக்கும் எழுத்தாளர்கள் உண்டு. குழந்தை எழுத்தாளர் சங்கம் சார்பாக, ஏவி.எம். அறக்கட்டளை நடத்திய நாவல் போட்டியில், ஆர்.பொன்னம்மாள்

• 16 பக்க வண்ணப் படக் கதைகள்...



கதைகளின் களஞ்சியம் கோகுலம்!


முதல் பரிசாகத் தங்கப் பதக்கம் பெற்றார். 'கருணை விழிகள்' என்ற அக் கதை கோகுலம் பிப்ரவரி 1994 இதழ் முதல் தொடர்கதையாக வெளியானது. ஆர். பொன்னம்மாளின் படைப்புகள் இப்போதும் கோகுலத்தில் தொடர்ந்து கொண்டிருப்பதை அறிவீர்கள்.

எழுத்தாளர்கள் மட்டுமல்ல, கோகுலத்துக்கான வாசகர்களும் இருபத்தைந்து வருடங்களாக இருக்கிறார்கள். அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகிவிட்ட போதிலும் கோகுலத்தைப் படிக்கும் ஆர்வம் மட்டும் குறையவில்லை! அப்படிப்பட்டவர்களில் ஒருவர்தான் ஊத்தங்கரையைச் சேர்ந்த பி. கோவிந்தசாமி.

> “கோகுலம் சிறுவர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. உறுப்பினர் அட்டையில் குழந்தைக் கவிஞர் 'அழ.வள்ளியப்பா' கையொப்பமிட்டு அனுப்பி வைத்தார்.”

கோகுலத்தின் வெள்ளிவிழா ஆண்டுக்கு வாழ்த்து தெரிவித்து கடிதம் எழுதியவர், கூடவே அப்போதைய கோகுலத்தில் வெளியான

அவரது விமர்சனக் கடிதங்கள், துணுக்குகளைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். தற்போது தமிழ்நாடு மின்சார வாரியத்தில் வணிக ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறார்.



• வாசகர்
பி.கோவிந்தசாமி



கோகுலத்துடனான தமது இனிய நினைவுகளையும் கடிதத்தில் பகிர்ந்துள்ளார் :

'பதினாறு பக்க வண்ணப் படக் கதைகளை பைண்டிங் செய்து வைப்பேன். ஒவ்வோர் இதழும் வெளிவந்ததும் எனது கடிதமோ, படைப்போ வந்துள்ளதா என ஆவலுடன் பார்ப்பேன். மேலும் அப்போது கோகுலம் சிறுவர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அதில் உறுப்பினராகச் சேர்ந்தேன். உறுப்பினர் அட்டையில் குழந்தைக் கவிஞர் 'அழ.வள்ளியப்பா' கையொப்பமிட்டு அனுப்பி வைத்தார். அந்த அட்டையை (உறுப்பினர் எண் 5703) இன்னமும் பத்திரமாக வைத்துள்ளேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

நன்றி திரு.கோவிந்தசாமி அவர்களே! நீங்கள் படிப்பதுடன் மட்டுமின்றி இன்றையச் சிறுவர்களுக்கும் கோகுலத்தை அறிமுகப்படுத்தி படிக்கச் சொல்லுங்கள். உங்களைப் போன்றோரின் அன்பு தொடர்ந்தால் கோகுலம் நிச்சயம் பொன்விழாவைச் சந்திக்கும்.

அது சரி, அதென்ன உறுப்பினர் அட்டை? அதென்ன சிறுவர் சங்கம்? என்ற கேள்வி உங்கள் மனத்தில் எழுகிறதல்லவா? எந்தப் பத்திரிகையுமே செய்யாத ஓர் அற்புதமான, புதுமையான விஷயத்தை கோகுலம் செய்தது. அதைப் பற்றி அடுத்த மாதம் சொல்கிறேன். அதுவரை கொஞ்சம் காத்திருங்கள், ஃப்ரெண்ட்ஸ்! ●



தொடர்கிறது...

விடுமுறைச் சிறப்பிதழ்-II



மே 2007 இதழில்...





கோடையிலும் குளு குளு!

கிராமத்து விளையாட்டுகள்!

வழக்கம் போல் கதைகள், போட்டிகள்...

மறக்காமல் வாங்குங்கள்!

பேசாத படக்கதை

சூப்பர் காக்கா!

கருத்து : யுவா
படம் : தர்மா



உங்கள் கைவண்ணம்!



ஆர். தினேஷ்
பதினொறாம் வகுப்பு,
சுவாமி சிவானந்தா மேல்நிலைப் பள்ளி,
கோயம்புத்தூர்.

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/06-08 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/06-08 • Registered as a Newspaper in Srilanka